




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 251 23.04.2026 வியாழக்கிழமை

»Chennai »Volume: 01 »Issue: 251 »Thursday »pages 8 »Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


### இன்றைய நாள்

வியாழக்கிழமை
(23–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–10
பிறை: வளர்பிறை
திதி
சப்தமி பின்னிரவு 201 வரை
பிறகு அஷ்டமி.

நட்சத்திரம்:
புனர்பூசம் நள்ளிரவு
1.42 வரைபிறகு பூசம்.

யோகம்
அமிர்த யோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி.
சூலம் – தெற்கு

நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி.

மேஷம் ......................வரவு
ரிஷபம்...........ஆரோக்கியம்
மிதுனம் .................. லாபம்
கடகம்..........................ஈகை
சிம்மம் .................சாதனை
கன்னி .............. ..உண்மை
துலாம் ...................கவனம்
விருச்சிகம்............. கடமை
தனுசு .................... ஆர்வம்
மகரம் .....................வெற்றி
கும்பம்................ பாராட்டு
மீனம் ..................... நன்மை

# இன்று வாக்குப்பதிவு: களத்தில் 4,023 வேட்பாளர்கள்..

## பாதுகாப்புப் பணியில் 300 கம்பெனி துணை ராணுவப் படைகள்








**சென்னை, ஏப்.23:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று (23ம் தேதி) காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்குகிறது. தேர்தல் பாதுகாப்புப் பணியில் 300 கம்பெனி துணை ராணுவ படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வாக்குப் பதிவு நாளை நடைபெறும் நிலையில், நேற்று மாலை 6 மணியுடன் பிரச்சாரம் ஓய்ந்தது. சென்னை கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின், சேலம் எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, சென்னை நந்தனத்தில் தவெக தலைவர் விஜய், ஸ்ரீபெரும்புதூரில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சென்னை மயிலாப்பூரில் தமிழிசை சவுந்தரராஜன், சாத்தூரில் நயினார் நாகேந்திரன், தருமபுரியில் பாமக தலைவர் அன்புமணி, சென்னை எழும்பூரில் சசிகலா, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், காரைக்குடியில் நாதக மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான், சென்னையில் ஜி.கே.வாசன் ஆகியோர் தங்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தனர்.

தேர்தல் பிரச்சாரம் 21ம் தேதி மாலை 6 மணி வரையிலான 48 மணி நேரத்தை அமைதி காலமாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த அமைதி காலத்தில் தேர்தல் தொடர்பான எந்தப் பொதுக் கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ நடத்த கூடாது. எந்தத் தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எப் எம் ரேடியோ, வாட்ஸ் அப், முகநூல், டிவிட்டர் போன்ற அல்லது இதுபோன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது.

தொகுதிக்கு வெளியே இருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர் அல்லாதோர், அத்தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தமிழகம் முழுதும் திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளில் நேற்று மாலை முதலே போலீஸார் தீவிர சோதனை நடத்தி,தொகுதிக்கு தொடர்பு இல்லாதவர்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த 48 மணி நேர அமைதி காலத்தை மதுவிலக்கு நாளாக தேர்தல் ஆணையம் அறிவித்துள் ளது. அதனால் நேற்று முதல் நாளை நள்ளிரவு 12 மணி வரை மதுக்கடைகள், மதுக்கூடங்களை மூட தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதற்காக 75,064 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் பாதுகாப்பு பணியில் துப்பாக்கி ஏந்திய 300 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் 83,875 காவல் துறை பணியாளர்கள், 40,427 காவல் துறை அல்லாத பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். வாக்குச் சாவடி பணியில் 3.40 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த மார்ச் 15-ம் தேதியில் இருந்து, தலா 2,106 பறக்கும் படைகள், நிலைக் கண்காணிப்புக் குழுக்கள் நடத்திய சோதனையில் நேற்று வரை சுமார் ரூ.1,200 கோடிக்கு மேல் ரொக்கம், மதுபானங்கள், தங்கம், வெள்ளி பொருட்கள் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட இலவசப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இத்தேர்தலில் 234 தொகுதிகளுக்கும் 136 பொது பார்வையாளர்கள், 50 காவல் பார்வையாளர்கள் மற்றும் 150 செலவின பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று காலை 10 மணி முதல் இறுதிகட்ட பயிற்சியும், வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பலத்த பாதுகாப்புடன் அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் அனுப்பும் பணி தொடங்கியது. வாக்குப் பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் காவல்துறையினா்,துணை ராணுவத்தினா்,தீயணைப்புப் படையினா், வனத்துறையினா், சிறைத்துறையினா், ஓய்வுபெற்ற ராணுவ வீரா்கள், போலீஸாா், ஊா்க்காவல் படையினா் என சுமாா் 1.47 லட்சம் போ் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனா். பாதுகாப்பு பணிக்காக 295 கம்பெனிகளைச் சோ்ந்த சுமாா் 23 ஆயிரம் துணை ராணுவப்படையினா் தமிழகம் வந்துள்ளனா். மேலும் இதில் 26,203 காவல் ஆய்வாளாகள், உதவி ஆய்வாளா்கள்,சிறப்பு உதவி ஆய்வாளா்கள், 94,598 தலைமைக் காவலா்கள்,காவலா்கள் அடங்குவாா்கள். அதேபோல சிறப்பு அதிரடிப்படையைச் சோ்ந்த 12,150 பேரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனா். சென்னை,ஆவடி,தாம்பரம் காவல்துறைகளை தவிா்த்து 38 மாவட்டங்களிலும், 7 மாநகர காவல்துறை பகுதியிலும் 1.17 லட்சம் போலீஸாா் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறாா்கள்.

# ஆம்னி பேருந்து மீது கார் மோதியதில் 3 பேர் சம்பவ இடத்தில் பலி



**ஓசூர், ஏப்.23:**

ஓசூர் அருகே அதிகாலை நடந்த சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். தமிழ்நாட்டின் தற்போதைய 16வது சட்டப்பேரவையின் ஆயுட்காலம் மே 10ம் தேதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து தமிழகத்தின் 17வது சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி (நாளை) ஒரே கட்டமாக நடைபெறுகிறது. இந்நிலையில் நாளை நடைபெறவுள்ள தேர்தலில் வாக்குப்பதிவு செய்ய பெங்களூருவில் இருந்து தருமபுரி நோக்கி ஒரு காரில் 4 பேர் வந்துள்ளனர். அப்போது சாணமாவு வனப்பகுதியில் கார் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஆம்னி பேருந்து மீது கார் மோதியது.

இந்தவிபத்தில்கார் அப்பளம் போல் நொறுங்கியதால் அதில் பயணித்த 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் 3 பேரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும் படுகாயம் அடைந்த ஒருவருக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பயங்கரவாதத்துக்கு இந்தியா அடிபணியாது’... பஹல்காம் தாக்குதல் நாளில் பிரதமர் மோடி!





**புதுடெல்லி, ஏப்.23:**

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் பலியானோரின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, இந்தியா எந்தவிதமான பயங்கரவாதத்துக்கும் அடிபணியாது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், “கடந்தாண்டு இதேநாளில், பஹல்காமில் நடந்த கொடூரமான பயங்கரவாதச் சம்பவத்தில் பலியான ஒன்றுமறியாத அப்பாவி உயிர்களை நாம் நினைவுகூர்கிறோம். அவர்களை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

அவர்களின் இழப்பைத் தாங்கிக்கொண்டு, மீண்டு வர முயலும் அவர்களின் குடும்பத்தினருடன் என்னுடைய எண்ணங்கள் துணை நிற்கின்றன.

நாம் அனைவரும் துயரமான சூழலிலும் ஒற்றுமையுடன் நிற்கிறோம். எந்தவிதமான பயங்கரவாதத்துக்கும் இந்தியா அடிபணியாது. பயங்கரவாதிகளின் கொடூரமான சதித் திட்டங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, கடந்தாண்டு ஏப். 22 ஆம் தேதி ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத்தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். பலர் அவர்களின் மனைவி மற்றும் குடும்பத்தினர் முன்னிலையிலேயே கொல்லப்பட்டது நாட்டையே உலுக்கியது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக மே 7 ஆம் தேதி நள்ளிரவில், இந்திய ராணுவமும், விமானப் படையும் இணைந்து நடத்திய “ஆபரேஷன் சிந்தூர்” நடவடிக்கைத் தாக்குதலில், பாகிஸ்தான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் இயங்கிவந்த ஜெய்ஷ்-ஏ-முகமது, லஷ்கர்-ஏ-தொய்பா, ஹிஸ்புல் முஜாஹிதீன் ஆகிய பயங்கரவாத அமைப்புகளின் 9 முக்கிய முகாம்கள் அழிக்கப்பட்டன. இந்திய ராணுவத்துக்குப் பதிலடி கொடுக்க முயன்ற பாகிஸ்தான் ராணுவ வீரர்களும் கொல்லப்பட்டனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு லஷ்கர்-ஏ-தொய்பாவின் நிழல் அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ஃபிரண்ட் குழு பொறுப்பேற்ற நிலையில், இந்தத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் குழுத் தலைவர் ஷேக் சஜ்ஜாத் குல் உள்பட பலர் கொல்லப்பட்டனர். இந்த அதிரடித் தாக்குதலில் ராணுவ வீரர்கள், பயங்கரவாதிகள் உள்பட சுமார் 150-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் நினைவுகூரத்தக்கது.

# ஈரானுக்கு எதிரான தற்காலிக போர்நிறுத்தம் நீட்டிப்பு: டிரம்ப்

**வாஷிங்டன், ஏப்.23:**



ஈரானுக்கு எதிரான அமைதிப்பேச்சுக்கு அவகாசம் அளிக்கும் வகையில், தற்காலிக போர்நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அதிபர் டிரம்ப் தனது சொந்த வலைதளப் பக்கமான ட்ரூத்சோஷியல் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், “ஈரானிய அரசு கடுமையான பாதிப்பைச் சந்தித்திருப்பதாக தோன்றும் உண்மையின் அடிப்படையிலும், பாகிஸ்தான் ராணுவத்தளபதி ஆசிம் முனீர் மற்றும் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில், ஈரானிய தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஒருங்கிணைந்த ஒப்பந்தத்தை முன்வைக்கும்வரை ஈரான் மீதான தாக்குதல்கள் நிறுத்திவைக்க எங்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அமெரிக்க ராணுவம் முற்றுகையைத் தொடரவும், எல்லா வகையில் தயார் நிலையில் இருக்கவும் உத்தரவிட்டுள்ளேன். அவர்களுடைய ஒப்பந்தம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவுக்கு வரும் வரை போர்நிறுத்தம் நீட்டிக்கப்படும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் இருந்து இந்திய கப்பல்களை பத்திரமாக வெளியேற்ற மத்திய அரசு தீவிரம்

**புதுடெல்லி, ஏப்.23:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, உலக கச்சா எண்ணெய் வர்த்தகத்தின் முக்கிய பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது.

இருப்பினும் சீனா, இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு ஈரான் அனுமதி வழங்குகிறது. போர் தொடங்கியதில் இருந்து இந்தியக் கொடி ஏந்திய 10 எல்பிஜி மற்றும் எண்ணெய் கப்பல்கள் இந்தியா வந்துள்ளன.

ஹார்முஸ் ஜலசந்தியில் கடந்த 18-ம் தேதி இந்தியக் கொடியுடன் வந்த 2 கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது. இதையடுத்து இந்தத் தாக்குதல் தற்செயலானது என ஈரான் விளக்கம் அளித்தது.

ஹார்முஸ் ஜலசந்தியில் இந்தியக் கொடி ஏந்திய மேலும் 14 கப்பல்கள் சிக்கியுள்ளன. இவற்றில் மூன்று பெரிய எண்ணெய் கப்பல்களும், ஒரு பெரிய எல்பிஜி கப்பலும் அடங்கும். இந்த கப்பல்களை அங்கிருந்து பத்திரமாக வெளியேற்ற மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது குறித்து வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் நேற்று கூறுகையில், “ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள இந்தியக் கப்பல்களின் பாதுகாப்பு குறித்து ஈரான் அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறோம். நமது கப்பல்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய ஈரானுடன் நாங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். மேலும், தற்போது ஈரானில் இந்திய குடிமக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களின் பாதுகாப்பும் நமக்கு மிக முக்கியம்” என்றார்.




## சொந்த ஊர்களுக்கு படையெடுத்து சென்ற திருப்பூர் பனியன் தொழிலாளர்கள்




**திருப்பூர், ஏப்.23:**
திருப்பூர் மாநகரம் பனியன் தொழிலை மையமாகக் கொண்டது என்பதால் இங்கு தென் மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களை சேர்ந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கி பணியாற்றி வருகின்றனர்.

சட்டசபை தேர்தலில் இவர்களின் ஜனநாயகக் கடமையை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, அனைத்து தனியார் நிறுவனங்கள், பனியன் பேக்டரிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு நாளை 23-ந்தேதி சம்பளத்துடன் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும். இதை மீறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தொழிலாளர் நலத்துறை எச்சரித்துள்ளது.

## விசில் அடிப்போரை தியேட்டருக்கு அனுப்புங்கள்: திருமாவளவன் பேச்சு

**காட்டுமன்னார்கோவில், ஏப்.23:**
"விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப்புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று விசிக தலைவர் திருமாவளவன் காட்டுமன்னார்கோவில் தொகுதி குமராட்சி பகுதியில் விசிக வேட்பாளர் ஜோதி மணிக்கு ஆதரவாக வாக்குச் சேகரித்தார்.




அப்போது அவர் பேசியதாவது: இன்றுள்ள அதிமுக ஜெயலலிதாவின் அதிமுக அல்ல. அது மோடியின் அதிமுக. அதேபோல் அன்புமணி தலைமையிலான பாமக-வும் மோடியின் பாமக தான். நீங்கள் பாமக-வுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் நேரடியாக பாஜக-வுக்கே செல்லும்.

சாதி உணர்வைத் தூண்டி உங்களிடம் ஓட்டு வாங்குபவர்களிடம் ஏமாறாதீர்கள். விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப்புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல. விஜய்க்குப் போடும் ஓட்டு பாஜக-வுக்குப் போடுவதாகவே அர்த்தம். திமுக-வை பலவீனப்படுத்தவே அவர் களமிறக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் மோடி மற்றும் அமித் ஷா ஆகியோரின் மூளை செயல்படுகிறது. காட்டுமன்னார்கோவில் சிறுத்தைகளின் தாய்மடி என்பதை நிரூபிக்கும் வகையில், ஜோதிமணியை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

### செய்யாறு அருகே

## காஞ்சிபுரம் சிறுமி பாலியல் வன்கொடுமை மகளிர் ஆணையம் விசாரணை

**செய்யாறு, ஏப்.23:**
சிறுமி கொடூரமாக கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதை தேசிய மகளிர் ஆணையம் தாமாகவே முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.



இது போன்ற ஈவிரக்கமற்ற கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுமிகளுக்கு எதிரான வன்முறை என்பது மனித உரிமைகளின் பெரும் மீறலாகும். இந்த மிருகத்தனமான செயலை ஆணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இதுபோன்ற சம்பவங்களுக்கு உடனடி கடுமையான சட்ட நடவடிக்கையும் தேவை.

பாரதிய நியாய சம்ஹிதா மற்றும் போக்சோ சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கையை உடனடியாகப் பதிவு செய்யவும், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் உடனடியாகக் கைது செய்யவும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தேவையான அனைத்து உதவிகளை வழங்கவும், தமிழக டி.ஜி.பி.க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5 நாட்களுக்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விரிவான அறிக்கையை தமிழக போலீசார் சமர்பிக்க வேண்டும் என தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விசாரணை நடத்தி வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

## மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கு சி.பி.ஐ.க்கு மதுரை ஐகோர்ட் நோட்டீஸ்

**மதுரை, ஏப்.23:**
மதுரை திருப்புவனம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமாரை நகை திருட்டு வழக்கில் 2025 ஜூன் 27-ந் தேதி, விசாரித்து விட்டு வெளியே சென்ற பிறகு, சிறப்பு விசாரணை குழுவினர் அஜித்குமாரை, வெளியே அழைத்துச் சென்று விட்டனர்.



சி.பி.ஐ., கூடுதல் குற்றப் பத்திரிகையில் என் பெயர் உட்பட மேலும் 4 நபர்களின் பெயர்களை சேர்த்துள்ளது. சிறப்பு விசாரணை குழுவினரால் அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டு உயிரிழந்த அஜித்குமாரின் மரண வழக்கில் தேவையின்றி என் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்காக பல போலியான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஆகவே அஜித் குமார் மரண வழக்கில் என் பெயரையும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை ரத்து செய்ய உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி புகழேந்தி, "வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. துணை காவல் கண்காணிப்பாளர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

## 200 தொகுதிகளில் திமுக வெற்றி உறுதி: இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஸ்டாலின் சபதம்

**சென்னை,ஏப்.23:**
முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து நடந்து சென்று பொது மக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.



திமுக 200 தொகுதிகளில் உறுதியாக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது. இறுதிநாளான நேற்று திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், சென்னையில் வில்லிவாக்கம் மற்றும் தான் போட்டியிடும் கொளத்தூர் தொகுதிகளில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

வில்லிவாக்கம் தொகுதியில் முதல்வர் ஸ்டாலின் பேசும் போது, "திமுக ஆட்சி அமைந்த பிறகு 90 சதவீதத்துக்கு மேலான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம். மிச்சமுள்ள உறுதிமொழிகூட மத்திய அரசு நிதி தராததால் தடைப்பட்டது. எனினும், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தினோம்.

முதலில் ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை, ஆட்சிக்கு வர முடியாது என்றார்கள். ஆனால் வந்தோம். இப்போது திமுக தொடர்ந்து 2-வது முறையாக ஆட்சிக்கு வந்ததில்லை என கூறுகிறார்கள். இந்த விமர்சனத்தை உடைத்து மீண்டும் ஆட்சி அமைப்போம். பதவிக்காக இல்லை, ஒட்டுமொத்த தமிழகத்துக்காகதான் கூறுகிறேன். எனவே, 2-வது முறையாக என் தலைமையில் திமுக ஆட்சி அமைய வாக்களிக்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து கொளத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதாவது: ஒட்டுமொத்தத் தமிழகத்துக்கும் நான் முதல்வராக இருந்தாலும், கொளத்தூர் எனது செல்லக் குழந்தை. இந்த தொகுதிக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்துள்ளேன். அந்த பணிகள்தான் எனக்காக இங்கு ஓட்டு கேட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒரு மாடல் தொகுதியாக கொளத்தூரை மாற்றி வைத்திருக்கிறேன். இன்னும் சிறப்பாக கொளத்தூரை மேம்படுத்துவேன்.

அதிமுகவிடம் ஆட்சி சென்றால், டெல்லி ரிமோட் கன்ட்ரோல் ஆட்சிதான் நடைபெறும். நமது அனைத்து திட்டங்களும் நின்றுபோய்விடும். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனே இல்லத்தரசி திட்டத்துக்குதான் முதல் கையெழுத்து. இதேபோல், 500-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் கொண்ட தொலைநோக்கு ஆவணமாக நம் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டில் அதையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, 2031 தேர்தலின்போது வாக்கு கேட்டு நான்தான் மீண்டும் வருவேன். இது சத்தியம். திமுக 200 தொகுதிகளில் உறுதியாக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இதேபோல், முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட காணொலியில், "நமது தமிழகத்தின் எதிர்காலத்தை நீங்கள் எழுதப் போகும் நாள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு தெரியும். எது உண்மை? எது பொய்? எது நடிப்பு? எது உழைப்பு? யார் நரி? யார் சிங்கம்? அடிமைத்தனம் எது? தைரியம் எது? அனைத்துமே உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

நாம் வீழ்த்திய எதிரிகளின் சதிகளை எண்ண ஆரம்பித்தால், அதற்குள்ளாக தேர்தல் முடிவே வந்துவிடும். நமது திட்டங்களை, அதனால் விளைந்த நன்மைகளை நான் பட்டியலிட ஆரம்பித்தால், அடுத்த தேர்தலே வந்துவிடும்.

எனக்கு நீங்கள் கொடுத்த கடமையை என்னால் முடிந்த வரைக்கும் சரிவரச் செய்துவிட்டேன். உங்கள் கடமையை நீங்களும் சரிவர செய்ய வேண்டும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு இதுவரை யாரும் காணாத ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறேன். இனி நமது போட்டி டெல்லியுடன் மட்டும் இருக்காது. தெற்காசியாவில் அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழகத்தை மாற்றிக் காட்டுவேன். மண், மொழி, மானம் மூன்றையும் காப்பாற்ற மூச்சு இருக்கும் வரைக்கும் போராடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

## புரட்சிக்குத் தலைமை தாங்குவேன்! காரைக்குடியில் சீமான் ஆவேசம்

**காரைக்குடி, ஏப்.23:**
இலங்கை, நேபாளம், வங்கதேசம் போன்று எதிர்காலத்தில் தமிழகம் பெரிய புரட்சியைச் சந்திக்கும். அதற்கு நான் தலைமை தாங்குவேன் என்று காரைக்குடியில் பிரச்சாரம் செய்த சீமான் ஆவேசமாகப் பேசினார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் நாதக வேட்பாளராக கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிடுகிறார். காரைக்குடி புதிய பேருந்து நிலையம், ஐந்துவிளக்கு, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் சீமான் பிரச்சாரம் செய்தார். நேற்று பிரச்சாரத்தின் இறுதிநாளில் தனது தொகுதிக்கு உட்பட்ட செக்காலை ரோடு என்ற இடத்தில் பிரச்சாரத்தை அவர் நிறைவு செய்தார்.

இதற்கிடையே, சீமான் நேற்று வெளியிட்ட வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது: இங்கு சாதி பேசி, மதம் பேசி, பணம் கொடுத்து அரசியல் செய்ய நாம் வரவில்லை. இங்கு ஊழல், லஞ்சத்துக்கும், உண்மை, நேர்மைக்கும் தான் போட்டி. இந்த சரித்திரத்தை மாற்றி எழுத வேண்டும் என்று வந்திருக்கிறோம்.

வரலாற்றில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று வந்திருக்கிறோம். இது நம் பெரிய கனவு. இதை செய்ய நினைக்கிறோம். பெண்களுக்கான சரிபாதி உரிமை, எல்லா சமூகத்தினரும் புறக்கணிக்கப்படாமல் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மாற்றம் வரவேண்டும் என்றால் அது நம் கையில் தான் உள்ளது. நமக்கு ஒரே ஒரு வாய்ப்பு தான் இருக்கிறது. எப்படி பார்த்தாலும் வெற்றிக்கு ஒரே வழி உழைக்க வேண்டும். ஒரு நாள் நாம் வெல்வோம். வரலாறு வழிகாட்டியாக இருக்கும்.

நமக்கு ஆலோசகர் என்று கூட யாரும் இல்லை. நான் உங்கள் உழைப்புக்கு பொருளாதாரத்தில் வலிமைப்படுத்த முடியாமல் இருந்திருக்கலாம், ஆனால் மனித ஆற்றலை தாண்டி உழைத்திருக்கிறேன். இயன்றதை கொடுத்திருக்கிறேன். நம்பிக்கையோடு களத்தில் இருங்கள். உறுதியாக நாம் வெல்வோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## குற்ற வழக்கில் கைதாகி சிறையில் இருப்பவர்கள் வாக்களிக்க முடியாது: உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஏப்.23:**
குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களை வாக்களிக்க அனுமதிக்க முடியாது என மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தை மேற்கோள்காட்டி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தடுப்புக் காவலில் இருப்பவர்களை மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கலாம் என்ற உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவை மேற்கோள் காட்டிய தேர்தல் ஆணையத்தின் வாதத்தை ஏற்ற உயர்நீதிமன்றம் ஹரிநாடாரின் மனுவை தள்ளுபடி செய்தது.



மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு, குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹரிநாடார், தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை மட்டும் வாக்களிக்க அனுமதிக்கலாம் என உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காவல் துறை தரப்பில், ஹரிநாடாருக்கு எதிராக மூன்று குற்ற வழக்குகள் உள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 62 உட்பிரிவு 5ன் படி, சட்டப்பூர்வ காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களும், குற்ற வழக்குகளில் தண்டிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களும் வாக்களிக்க முடியாது. இந்த சட்டப்பிரிவை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளதால், வாக்களிக்க அனுமதிக்க முடியாது எனக் கூறி, ஹரிநாடாரின் மனுவை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது.

## விருத்தாசலத்தில் வீடு வாங்குவேன்



### பிரேமலதா உறுதி

**விருத்தாசலம், ஏப்.23:**
விருத்தாசலத்தில் சாலையோர வியாபாரிகளிடம் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வாக்கு சேகரித்தார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, நேற்று தனது பிரச்சாரத்தை விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில் முன்பு நிறைவு செய்தார்.

அப்போது பேசிய பிரேமலதா, "விருத்தகிரீஸ்வரர் அருளால் இத்தொகுதியில் நான் வெற்றி பெறுவேன். திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும்.

நான் வெற்றி பெற்றதும் ஒவ்வொரு கிராமத்திலும் வீதி வீதியாக சென்று மக்களைச் சந்திந்து நன்றி கூறுவேன். கேப்டன் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து செய்வேன்.


'விருத்தாசலத்தை மாவட்டமாக்க வேண்டும்' என்பது இத்தொகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது. அதை நிச்சயம் நிறைவேற்றுவேன்.

நான் விருத்தாசலத்தில் வீடு வாங்கி இங்கே தங்கி, விருத்தாசலத்தின் மகளாக இருப்பேன். தமிழகத்திலேயே முன்மாதிரி தொகுதியாக விருத்தாசலத்தை மாற்றிக் காட்டுவேன்.

தேமுதிக திமுக கூட்டணியில் இணைந்தவுடன் பல்வேறு விமர்சனங்கள் மூலம் திமுக கூட்டணியில் சலசலப்பை உருவாக்கலாம், குழப்பத்தை ஏற்படுத்தலாம் என எதிர்க் கூட்டணில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டனர். விசிக தலைவர் திருமாவளவன் தான் அனைவரையும் ஒருங்கிணைத்து, அவற்றையெல்லாம் சரி செய்திருக்கிறார்" என்று தெரிவித்தார்

## சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து தமிழகம் திரும்பும் மக்கள்

**சென்னை, ஏப்.23:**
வேலைக்காகவெளிநாடுகளுக்கு சென்றவர்கள் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக, விமானங்கள் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.



இந்த தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதற்கிடையில், வேலைக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் குழுவாகவும், தனித்தனியாகவும் விமானம் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு தினமும் 8 ஆயிரம் முதல் 8,500 பயணிகள் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக சென்னைவரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்தாலும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்பதற்காக மக்கள் வருவது தேர்தல் ஆணைய அதிகாரிகளை ஆச்சரியமடைய வைத்துள்ளது.

### ஸ்ரீபெரும்புதூர் அருகே

## கோவில் குளத்தில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

**ஸ்ரீபெரும்புதூர், ஏப்.23:**
ஸ்ரீபெரும்புதூர் அடுத்த மாம்பாக்கம் தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர் ராம்கி. இவரது மகள் ஜனதுவிசா, மகன் நிதிர்ஷன் (வயது5).

நேற்று காலை ஜனதுவிசா, நிதிர்ஷன் ஆகியோர் பக்கத்து வீட்டை சேர்ந்த தோழி மற்றும் அவரது பாட்டியுடன் குடியிருப்புக்கு அருகில் உள்ள பொன்னியம்மன் கோவில் குளத்திற்கு சென்றனர். அப்போது குளத்தில் உள்ள தாமரை பூவை பறிக்க ஜனதுவிசா, அவரது தம்பி நிதர்ஷன் ஆகிய இருவரும் தண்ணிரில் இறங்கியதாக தெரிகிறது. இதில் அவர்கள் 2 பேரும் தண்ணீரில் மூழ்கினர்.

இதனை கண்டு கரையில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் தண்ணீரில் மூழ்கிய ஜனதுவிசா, நிதிர்ஷன் ஆகிய 2 பேரையும் மீட்டு ஸ்ரீபெரும்புதூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சிறுவன் நிதர்ஷன் பரிதாபமாக இறந்தான். அவரது அக்காள் ஜனதுவிசாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து ஸ்ரீபெரும்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வாக்குச்சாவடி மையங்களில் சிசிடிவி கேமராக்களை குறைக்கக்கூடாது

### அதிமுக வலியுறுத்தல்

**சென்னை, ஏப்.23:**
அ.தி.மு.க. எம்.பி. இன்பதுரை தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி உள்ள அவசர மனுவில் கூறியிருப்பதாவது:-



அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவை கண்காணிக்கும் வகையில் கேமரா பொருத்தப்படுகிறது. சில மாவட்டங்களில் இந்த கேமராக்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சி நடப்பதாக தெரிகிறது.

இதன் மூலம் வாக்குச்சாவடி கைப்பற்றல், கள்ள ஓட்டு போடுதல் உள்ளிட்ட தவறுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தேர்தல் ஆணையம் நேரடியாக தலையிட்டு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்ட கேமராக்கள் குறையாத வண்ணம் அதிரடி ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# கவிதை அரங்கம்!





நீ இல்லாத நொடிகள்,
முகவரி இல்லாத
கடிதங்களைப் போன்றது.


என் சுவாசத்தின் ஈரம் நீ,
என் ரத்தத்தின் ஓட்டம் நீ,
என் மொத்தத்தின் உயிர்
நீ!

வானவில்லின் வர்ணங்கள்
மறைந்து போகலாம்,
நம் காதலின் வண்ணம்
என்றும் மாறாது.

கடிகார முட்கள் ஓடுவதை
நிறுத்துவதில்லை,
உன்னை நோக்கிய என்
தேடலும் அப்படித்தான்.

நீ ஒருமுறை திரும்பிப்
பார்த்தால் போதும்,
என் ஒட்டுமொத்தக்
காத்திருப்பும்
அர்த்தமாகும்.

# வாழ்க்கை தத்துவம்...



எதையும் தாங்கும் இதயம் இருந்தால், எதற்கும் கலங்காத நிலை வரும்.

கவலை என்பது ஒரு சுழல்; சுழன்று கொண்டே இருந்தால் வெளியே வர முடியாது.

அமைதி என்பது பலவீனம் அல்ல; அது ஒரு மிகப்பெரிய ஆயுதம்.

பொறாமை கொண்டவன் நிம்மதியை இழக்கிறான்; அன்பு கொண்டவன் உலகையே வெல்கிறான்.
உன் எண்ணங்களே உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன.

மன்னிக்கும் குணம் உன்னை ஒரு படி உயர்த்தும்.

# இருமலர்கள்

மாலையின் மந்த காற்று தோட்டத்தை மெதுவாக வருடியது. அந்தப் பழைய வீட்டின் பின்புறம் இருந்த அந்தச் சிறிய தோட்டத்தை மீனாட்சி அம்மாள் என்ற மூதாட்டி பராமரித்து வந்தார். அந்தத் தோட்டத்தில் உள்ள இரண்டு செடிகள் மட்டும் எப்போதும் அவரது கவனத்தை ஈர்த்தன. ஒன்று செம்பருத்தி, மற்றொன்று மல்லிகை. அவற்றை “இருமலர்கள்” என்று அழைப்பார். அவை நினைவின் நிழல்கள்.

அன்றும் அச்செடிகளுக்கு நீர் விடும் போது, அவரது நினைவு பல ஆண்டுகளுக்கு முன் அந்த வீட்டில் வாழ்ந்த ராகவன், லலிதா தம்பதியரிடம் சென்றது. இவர்கள் புதுமணத் தம்பதியராக வந்தபோது, அவர்களது முகம் மலர்ந்த தோட்டம் போல இருந்தது.

ராகவன் ஒருநாள் பலவண்ணச் செம்பருத்தி செடிகளை நட்டு, “இவைகளைப் போல நம்ம வாழ்க்கையும் பல நிறங்களில் பிரகாசிக்கணும், லலிதா” என்றான்.

லலிதா சிரித்தபடி மல்லிகை செடியை நட்டு, “அதோடு நறுமணமும் வேண்டும்,” என்றாள்.

ராகவன் உறுதியான மனம் கொண்டவன்; வாழ்க்கையை நேராகப் பார்க்கிறவன். லலிதா மென்மையானவள்; உணர்ச்சிகளில் வாழ்கிறவள்.

ஆண்டுகள் செல்ல செல்ல, இருவரும் விருப்பங்களில் வேறுபட்டார்கள். வாழ்க்கை சுமைகள், புரியாத மனநிலைகள், சொல்லாமல் போன வார்த்தைகள் என மெதுவாக அவர்கள் மனரீதியாகப் பிரிந்ததை உணரத் தொடங்கினார்கள். ஒரே வீட்டில் இருந்தும் தனிமையில் வாழ்ந்தார்கள்.

ஒருநாள் கடும் வாக்குவாதத்துக்குப் பிறகு, “நமக்குள் ஒத்து போகாது” என சுமுகமாக இருவரும் பிரிய முடிவு செய்தனர். லலிதா அந்த வீட்டை விட்டுச் சென்றாள். அதன் பிறகு ராகவனும் வேறு ஊருக்குச் சென்றான்.

ஆனால் காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. மழை பெய்தது. வெயில் பட்டது. செம்பருத்தியும் மல்லிகையும் தங்களுக்குள் பேசிக்கொண்டு இருப்பது போல மீண்டும் மீண்டும் மலர்ந்து கொண்டே இருந்தன.

பல வருடங்களுக்கு பிறகு , முதுமையில் ராகவன் அந்த வீட்டிற்குத் திரும்பினான். ஆனால் வீடும் தோட்டமும் மீனாட்சி அம்மாளின் பராமரிப்பில் சுத்தமாக இருந்தது. தோட்டத்தில் காய்கறிச் செடிகள், பலவண்ண மலர்கள் என பார்க்கவே மிக ரம்மியமாக இருந்தது.

இவற்றைப் பார்த்த ராகவனுக்கு அவன் நட்ட செம்பருத்தி செடிகள் நினைவிற்கு வந்தன. அவற்றருகில் அமர்ந்தான். அச்செடிகளில் மலர்கள் செம்மையாக மலர்ந்திருந்தன. அருகிலேயே மல்லிகை மென்மையாக மணம் வீசியது. அந்த மணம் லலிதாவும் அவனும் பேசிய நினைவுகளைத் திறந்தது. “நாம் தோற்றுப் போனது வாழ்க்கையிலா... இல்லை நம்ம அகங்காரத்தினாலா?” என்று அவன் மனதில் கேள்வி எழுந்தது. மலர்கள் பிரியவில்லை... அவைகளுக்குள் நிறம், மணம் வேறுபட்டாலும் எந்தப் பிரிவினையுமின்றி அழகாகப் பூத்து குலுங்குகின்றன. அவற்றை நட்ட என்னைத் தான் அகங்காரம் ஆட்டுவிக்கிறது,” என்று பலவாறாக யோசித்தபடி அமர்ந்திருந்தான்.

அருகில் வந்த மீனாட்சி அம்மாள், “இவைகளைப் பாரு ராகவா... ஒன்றுக்கு வலிமை, இன்னொன்றுக்கு மணம்... இரண்டும் சேர்ந்ததால் தான் இந்தத் தோட்டம் அழகாக இருக்கிறது,” என்றதும் ராகவனின் கண்களில் நீர் சொரிந்தது.

“இளமையில் அவசரமாக எடுக்கும் முடிவுகளின் வலி காலங்கடந்து புரிந்தால் என்ன செய்வது, அம்மா? நாங்க திரும்பவும் சேர முடியுமாம்மா?” என்று கவலையுடன் கேட்டான் ராகவன்.

மீனாட்சி அவனைத் தட்டி ஆசுவாசப்படுத்தியபடி, “மலர்கள் தினமும் புதிதாக மலருது... அதைப் போல மனித மனங்களுக்கும் ஏன் அந்த வாய்ப்பு கிடைக்கக்கூடாது? கண்டிப்பாக நடக்கும். கவலைப்படாதே,” என்று சொல்லி கடவுளிடம் ராகவனுக்காக முறையிடச் சென்றார்.

அன்று இரவு, பல ஆண்டுகளுக்குப் பிறகு, “நம்ம வாழ்க்கை இன்னும் முடிஞ்சுடல... அது இனிமேலும் மலரலாம்,” என்ற எதிர்பார்ப்புடன் தோட்டத்தைப் பார்த்தான் ராகவன். அவனுக்கு பதில் சொல்வது போல இருமலர்களும் மெதுவாக அசைந்தன. புதிய நம்பிக்கையோடு, வெகு நாட்களுக்குப் பின் ராகவன் நிம்மதியாக உறங்கினான்.

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



மனைவி: ஏங்க, கல்யாணத்துக்கு முன்னாடி எனக்கு எவ்வளவு கிஃப்ட் வாங்கித் தருவீங்க.. ஆனா இப்பல்லாம் ஒண்ணுமே வாங்கித் தர்றது இல்ல?

கணவர்: நீ எப்போதாவது பார்த்திருக்காளா... மீன் சிக்கின அப்புறம் யாராவது தூண்டில்ல இரை போடுவாங்களா?



# தினம் ஒரு சமையல்




## வெண்டைக்காய் மசாலா

**தேவையான பொருட்கள்:**


வெண்டைக்காய்: 1/4 கிலோ (நீளவாக்கில் நறுக்கியது)
வெங்காயம்: 2 (பொடியாக நறுக்கியது)
தக்காளி: 2 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி பூண்டு விழுது: 1 டீஸ்பூன்
மஞ்சள் தூள்: 1/4 டீஸ்பூன்
மிளகாய் தூள்: 1 டீஸ்பூன்
மல்லித் தூள்: 1 டீஸ்பூன்
கரம் மசாலா: 1/2 டீஸ்பூன்
உப்பு & எண்ணெய்: தேவையான அளவு
தாளிக்க: கடுகு, சீரகம், கருவேப்பிலை.

**செய்முறை:**



வெண்டைக்காயை வதக்குதல்:
முதலில் ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி, நறுக்கி வைத்துள்ள வெண்டைக்காயைச் சேர்த்து மிதமான தீயில் வதக்கவும்.
வெண்டைக்காயின் பிசுபிசுப்புத் தன்மை நீங்கி, லேசாக நிறம் மாறும் வரை வதக்கி தனியாக எடுத்து வைக்கவும்.
மசாலா தயாரித்தல்:
அதே வாணலியில் மீண்டும் சிறிது எண்ணெய் ஊற்றி கடுகு, சீரகம், கருவேப்பிலை தாளிக்கவும்.
பின்பு வெங்காயத்தைச் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். இதனுடன் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.
இப்போது தக்காளி மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து, தக்காளி நன்கு குழைய வேகவிடவும்.
பொடிகள் சேர்த்தல்:
தக்காளி வதங்கியதும் மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித் தூள் மற்றும் கரம் மசாலா சேர்த்து லேசாக வதக்கவும். (சிறிது தண்ணீர் தெளித்தால் மசாலா கருகாமல் இருக்கும்).
ஒன்று சேர்த்தல்:
மசாலாவிலிருந்து எண்ணெய் பிரிந்து வரும்போது, வதக்கி வைத்துள்ள வெண்டைக்காயைச் சேர்த்து மெதுவாகக் கிளறவும்.
மூடி வைத்து 5 நிமிடம் குறைந்த தீயில் வேகவிடவும். மசாலா வெண்டைக்காயுடன் நன்றாகச் சேர்ந்ததும் இறக்கவும்.

# ஆரைக்கீரை பயன்கள்



ஆரைக்கீரை (WATER CLOVER) நீர் நிலைகளில் வளரக்கூடிய ஒரு அற்புதமான மருத்துவக் குணங்கள் கொண்ட கீரை வகை. "ஆரைக்கீரை உண்டார் பேரைச் சொல்லார்" என்ற பழமொழி இதன் மருத்துவச் சிறப்பை உணர்த்துகிறது. இதன் முக்கியப் பயன்கள் இதோ:

1. உடல் வெப்பத்தைத் தணிக்கும்

ஆரைக்கீரை இயற்கையிலேயே குளிர்ச்சித் தன்மை கொண்டது. இது உடல் சூட்டைக் குறைத்து உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும். குறிப்பாக கோடை காலங்களில் ஏற்படும் அதிக வெப்பத்தைத் தணிக்க இது மிகச்சிறந்த மருந்து.

2. நீரிழிவு நோய்க்கு (DIABETES) மருந்தாகும்

சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதில் ஆரைக்கீரைக்கு முக்கியப் பங்கு உண்டு. இது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைச் சீராக வைத்திருக்க உதவுகிறது. இதன் இலைச் சாறு அல்லது கஷாயம் இன்சுலின் சுரப்பைத் தூண்ட உதவும்.


3.தூக்கமின்மை நீங்க

இரவில் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் ஆரைக்கீரையை உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். இது நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி, மன அழுத்தத்தைக் குறைத்து ஆழ்ந்த உறக்கத்தைத் தரும்.

4. சிறுநீரக ஆரோக்கியம்

சிறுநீரகக் கோளாறுகள், சிறுநீர் எரிச்சல் போன்ற பிரச்சினைகளுக்கு ஆரைக்கீரை ஒரு சிறந்த தீர்வாகும். இது ஒரு இயற்கை சிறுநீர்ப் பெருக்கியாக (DIURETIC) செயல்பட்டு, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற உதவுகிறது.

# நடிகர் முரளியை ஓங்கி அடித்த ரம்பா.! காரணம் என்னன்னு தெரியுமா.? வைரலாகும் பேட்டி



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக ரசிகர்களை கவர்ந்தவர் ரம்பா. இவர் 90களிலிருந்து இன்று வரை பலரின் கனவு கன்னியாக காணப்படுகிறார். அழகும் வசீகரிக்கும் நடிப்பும் மூலம் தனக்கென பெரிய ரசிகர் பட்டாளத்தை உருவாக்கிய அவர், தனது திரைப்பயணத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரான தொழிலதிபர் இந்திரனை திருமணம் செய்து கொண்ட ரம்பா, அதன் பின்னர் கனடாவில் குடும்பத்துடன் செட்டிலாகி வாழ்ந்து வருகிறார். தற்போது சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நடுவராகவும் பங்கேற்று வருகிறார். இந்நிலையில், சமீபத்திய பேட்டியில் அவர் பகிர்ந்த ஒரு சுவாரசியமான சம்பவம் இணையத்தில் வைரலாகியுள்ளது. தேசிய கீதம் படத்தின் படப்பிடிப்பின்போது நடிகர் முரளியுடன் நடித்துக்கொண்டிருந்த போது இந்த நிகழ்வு நடந்ததாக ரம்பா தெரிவித்துள்ளார்.

அதாவது, ஒரு நாள் ஷூட்டிங் தயாரிப்பில் இருந்தபோது, ரம்பாவின் தலையில் இருந்த தூசியை தட்டிவிட முரளி முயற்சித்தாராம். ஆனால் அதை கண்ணாடியில் பார்த்த ரம்பா, அவர் தன்னை பயமுறுத்த முயற்சிக்கிறார் என்று தவறாக புரிந்து கொண்டு பயத்தில் அவரை அடித்துவிட்டாராம்.


பின்னர் உண்மை தெரிந்ததும் உடனே மன்னிப்பு கேட்டதாகவும், அந்த சம்பவத்தை இப்போது நினைத்தால் சிரிப்பாக இருக்கிறது என்றும் ரம்பா பகிர்ந்துள்ளார். இந்த நகைச்சுவையான அனுபவம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# சினிமா

படப்பிடிப்பில் எடுத்துக்கொண்ட கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை நடிகை க்ரித்தி சனோன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அவர் பதிவிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகிறது. இதோ அந்த புகைப்படங்கள்:

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பணிப்பெண்களுக்கு அடித்த அதிர்ஷ்டம்.! சூர்யாவுடன் வைரல் செல்ஃபி



தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் சூர்யா மற்றும் பிரபல நடிகரும் இயக்குநருமான ஆர்.ஜே. பாலாஜி ஆகியோர் நேற்றைய தினம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இலங்கைக்கு சென்றுள்ளனர்.

இந்த வருகைக்கான காரணம் குறித்து இரு தரப்பிலிருந்தும் உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. எனினும் ஆர்.ஜே. பாலாஜி இயக்கும் கருப்பு படத்தில் சூர்யா நடித்து வருவதால், அந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடர்பாக இலங்கை சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்நிலையில் சூர்யா, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பணிப்பெண்களுடன் எடுத்துக்கொண்ட செல்ஃபி தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக வைரலாகி வருகிறது.

தங்கள் விமானத்தில் பயணித்த சூர்யாவுடன் செல்ஃபி எடுத்துக்கொண்ட அந்த பணிப்பெண்களுக்கு கிடைத்த இந்த அதிர்ஷ்டம் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மேலும் கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் காணொளிகளும் சமூக வலைதளங்களில் பரவி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வருகின்றன.

# ஸ்ரீசுதர்சனர் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்!

ஸ்ரீசக்கரத்தாழ்வாரை தரிசித்தால், சகல தோஷங்களும் விலகும். அவரின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்று நிம்மதியும், சந்தோஷமும் பொங்க வாழலாம் என்பது ஐதீகம். ஸ்ரீசக்கரத்தாழ்வார் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்



1. ஸ்ரீசுதர்சனரை வழிபட சித்திரை நட்சத்திர தினங்கள் சிறப்பானவை. சித்திரை அவருக்குரிய நட்சத்திரம்.

2. சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஹோட சாயுத ஸ்தோத்திரமும் சொல்லி வந்தால் எளிதில் ஸ்ரீசுதர்சனரின் அருளைப் பெறலாம்.

3. சக்கரத்தானை, ‘திருவாழியாழ்வான்’ என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.

4. சுவாமி தேசிகன் இவரை ‘சக்ர ரூபஸ்ய சக்ரிண’ என்று போற்றுகிறார். அதாவது, திருமாலுக்கு இணையானவர் என்று இதற்குப் பொருள்.

5. கும்பகோணம் சக்ர படித்துறையில் உள்ள சக்கர தீர்த்தத்தில்தான் பிரம்மா அவப்ருத நீராடல் செய்து யாகம் செய்தார். உடனே பாதாளத்திலிருந்து சக்கரம் வெளிக்கிளம்பி மேலே வந்தது. அந்த சக்கரத்தின் நடுவில் பிரம்மனுக்கு அன்று காட்சி தந்த ஸ்ரீமந் நாராயணன்தான் இன்று நமக்கு ஸ்ரீசக்ரபாணியாகக் காட்சி தருகிறார்.

6. சாளக்ராமங்களில் சுதர்சன சாளக்ராமம் மிகச் சிறந்தது. ஒரு சக்கரம் மட்டுமே உள்ள மிகப் பெரிய சாளக்ராமம் சுதர்சனமாகும். திருமாலின் சக்ராயுதத்தின் பூர்ண சக்தி இதற்கு உண்டு.

7. ஸ்ரீசக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள ஸ்ரீநரசிம்மரையும் வணங்கி சுற்றி பிரதட்சணம் செய்தால், நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும் அஷ்ட லட்சுமிகளையும், எட்டு திசைகளையும் வணங்கிய பலன் கிடைக்கும். 16 வகையான பேரருளும் கிடைக்கும் என்பது முன்னோர்களின் வாக்கு!

8. நரசிம்ம அவதாரத்தில் அரக்கனின் வரத்தையொட்டி எந்த ஆயுதமும் இல்லாமல் ஹிரண்யகசிபுவை நரசிம்மர் அழித்தபோது, அவரது நகங்களாக விளங்கியவர் சுதர்சனரே.

9. வாமன அவதாரத்தில், சுக்ராச்சாரியாரின் கட்டளையை மீறி மகாபலி மன்னன் வாமனனுக்கு தானம் கொடுக்க தாரை வார்த்தபோது, சுக்ராச்சாரியார் வண்டாக வந்து கமண்டல நீர்ப் பாதையை அடைத்தார். அப்போது திருமால் பவித்திரத்தால் கிளற, சுக்ராச்சாரி யார் தனது கண்ணை இழந்தார். அங்கு பவித்திரமாக வந்தவர் சுதர்சனரே.

10. சக்கரத்தாழ்வார் பல பழைமையான திருக்கோயில்களில் தனிச்சன்னிதி கொண்டு காட்சியளிப்பதைக் காணலாம். (குறிப்பாக ஸ்ரீரங்கம், காஞ்சி வரதர் கோயில், திருமாலிருஞ்சோலை (கள்ளழகர்) கோயில், திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.) தற்போது ஸ்ரீசுதர்சனரின் மகிமையைப் புரிந்துகொண்டு பல திருத்தலங்களில் இவருக்குத் தனிச்சன்னிதி அமைக்கப் பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

**A.S.Govinda rajan**
KODAMBAKKAM CHENNAI

## தினம் ஒரு தலைவர்கள்

# பாகாஜதீன் வரலாறு

புரட்சித் தளபதி பாகாஜதீன் (1879-1915) இந்திய விடுதலைக்காக போராடியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். வீரம் மிக்கவர்.

இவர் 1879 டிசம்பர் 5 ஆம் தேதி உமேஷ் சந்திர முதர்ஜி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜதீந்திர நாத் முகர்ஜி.

இளம் வயதிலேயே, வங்காள மாநிலம் நாதியா மாவட்டத்தின் கோயா கிராமத்தில் உள்ள கோடுய் நதிக்கரைப் புதரில் மறைந்திருந்த ஒன்பது அடி நீள வங்கப் புலி இவர் மீது பாய்ந்தது. இருபது நிமிடம் அதனுடன் போராடி சிறு கத்தியின் உதவியுடன் அதனைக் கொன்றதோடு புலி கடிபட்ட காலை வெட்ட வேண்டும் என்று மருத்துவர் கூறியதற்கு சம்மதிக்காமல் மனோபலத்தால் குணமடைந்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் ’புலியைக் கொன்றவன்’ என்ற பொருளில் பாகா ஜதீன் என்று மக்கள் இவரை அழைத்தனர்.

ராஷ்பிகாரி போஸ் போன்ற தலைவர்களின் பேச்சுக்கள் , கதர்க்கட்சி வீரர்களின் போராட்டங்கள், சுவாமி விவேகானந்தரின் கொள்கை முழக்கங்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட ஜதீன் அரவிந்தரின் இயக்கத்தில் அவருக்கு வலது கரமாக செயல்பட்டார். அதன்பின் அனுசீலன் சமிதி என்ற புரட்சி இயக்கத்தை உருவாக்கி செயல்பட்டார்.

தாம் சம்பந்தப்படாத வழக்கில்



சிக்கவைக்கப்பட்டு ஓராண்டு சிறையில் சித்திரவதை அனுபவித்த பின்னர் 1911 பிப்ரவரி 21 இல் விடுதலையாகி வெளியே வந்தார்.

டார்ஜிலிங்கிற்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது, ஒரு முதியவருக்கு குடிக்க தண்ணீர் கேட்டு தவித்துக்கொண்டிருந்ததை கண்டு அவருக்கு அடுத்த நிலையத்தில் தன்னிடமிருந்த பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார். அப்போது சிறிது நீர் மற்றவர்களை கேலி செய்து கொண்திருந்த ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் நால்வரில் ஒருவர் மேல் சிந்த அந்த அதிகாரி தடியார் ஜதீனை அடித்தார். அதை பொருட்படுத்தாமல் பெரியவரிடம் சென்று அருந்துவதற்கு தண்ணீரைக் கொடுத்துவிட்டு கீழே இறங்கி தன்னை அடித்த அதிகாரியின் கையை முறுக்கினார். அவருக்கு உதவ வந்த மற்ற மூன்று அதிகாரிகளும் இவர் ஒருவராலேயே அடித்து துவம்சம் செய்யப்பட்டு நடைபாதையிலேயே துவண்டு விழுந்தனர்.

இதன் காரணமாக தொடரப்பட்ட வழக்கில், ஆங்கிலேய நீதிபதி ஒரே ஓர் இந்தியன் நான்கு ஆங்கிலேயரை அடக்கினார் என்ற செய்தி வெளியே தெரிந்தால் இந்தியர்களுக்கு தன்னம்பிக்கையும் துணிவும், ஆங்கிலேயருக்கு இந்தியர் மேல் அச்சமும்,அவமானமும் ஏற்படும் என்று உணர்ந்து வழக்கை தள்ளுபடி செய்தார்.

## மேற்கு வங்கத்தில் செயல்பாடுகளை நிறுத்திய ஐ-பேக் முதல்வர் மம்தாவின் தேர்தல் பிரச்சாரம் பாதிப்பு




**புதுடெல்லி, ஏப்.23:**

மேற்கு வங்கத்தில் ஐ-பேக் நிறுவனம், முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் பிரச்சார ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

இந் நிலையில் நிலக்கரி ஊழல் தொடர்பான சட்ட விரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் கொல்கத்தாவில் உள்ள ஐ-பேக் அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இச்சூழலில் ஐ-பேக் தனது ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு மின்னஞ்சலில் மேற்கு வங்கத்தில் அடுத்த 20 நாட்களுக்கு பணிகளை நிறுத்தி வைக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கு வங்க பேரவைக்கு 2 கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் ஐ-பேக் தனது செயல்பாடுகளை நிறுத்துவதால் திரிணமூல் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஐ-பேக், வாக்குச் சாவடி அளவில் தரவுகளை சேகரித்து, அதன் அடிப்படையில் தேர்தல் பிரச்சார வியூகங்களை வகுத்து தருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் ஏற்கெனவே நிறைவடைந்து விட்டதாக திரிணமூல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கோடை நோய்களுக்கு பாராசிட்டமால் கூடாது: பொது சுகாதாரத் துறை

**புதுடெல்லி, ஏப்.23:**

கோடையின் தாக்கத்தால் வெப்பவாத பாதிப்புக்குள்ளானவர்களின் உடல் வெப்பநிலையைக் குறைக்க பாராசிட்டமால் மருந்தை அளிக்கக் கூடாது என்று பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பல மாவட்டங்களில் 100 டிகிரி வெயில் பதிவாகி வருகிறது. இதன் காரணமாக கோடை கால நோய்கள், வைரஸ் தொற்றுகள் பரவும் சூழல் எழுந்துள்ளது.

மற்றொருபுறம், இணை நோயாளிகள், குழந்தைகள், முதியவர்கள் பகல் வேளைகளில் அவசியமின்றி வெளியே வர வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேபோன்று வெப்பவாத பாதிப்புகளை (ஹீட் ஸ்ட் ரோக்) எதிர்கொள்ளும் வகையில் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை ஆயத்த நிலையில் வைத்திருக்குமாறு பொது சுகாதாரத் துறை தெரிவித்திருந்தது



இந்நிலையில், வெப்பவாத பாதிப்புக்கு உள்ளாவோரின் உடல் வெப்ப நிலையைக் குறைக்க மருத்துவரின் பரிந்துரையின்றி சிலர் வெவ்வேறு மாத்திரைகளை உட்கொள்வதாகத் தெரிகிறது. இதனால், கடுமையான எதிர்விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: வெப்ப வாதம் பாதிக்கப்பட்டு எவருக்கேனும் மயக்கம் ஏற்பட்டாலோ, உடல் சோர்வாக காணப்பட்டாலோ நிழல் மற்றும் காற்றோட்டம் உள்ள இடங்களில் ஒருபக்கமாக படுக்க வைப்பது அவசியம். அவர்களை தண்ணீர், இளநீர், மோர் பருகச் செய்து உடல் வெப்ப நிலையை குறைக்கலாம்.

மேலும், நீரில் நனைத்த துணியை உடலில் வைத்து துடைத்து வெப்பத்தைத் தணிக்க வேண்டும். காய்ச்சல் என நினைத்து, ஆஸ்பிரின், பாராசிட்டாமால் மாத்திரை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை கொடுத்தால், காய்ச்சல் குறைந்தாலும், எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். சிலருக்கு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். எனவே, மருத்துவரின் பரிந்துரையின்படி மட்டுமே கோடைகாலத்தில் மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## மேற்காசிய பதற்ற நிலை; 63-ல் இருந்து 116 அமெரிக்க டாலராக கச்சா எண்ணெய் விலை அதிரடி உயர்வு

**புதுடெல்லி, ஏப்.23:**

மேற்காசியாவில் பதற்ற நிலை நீடித்து வரும் சூழலில், மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, கடந்த ஜனவரியில் கச்சா எண்ணெய் கொண்ட பீப்பாய் ஒன்று 63 அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்தது.

இந்த விலை கடந்த மார்ச்சில் அதிகரித்து, பீப்பாய் ஒன்று 113 அமெரிக்க டாலராக அதிகரித்தது. ஏப்ரலில், சராசரியாக 116 அமெரிக்க டாலராக விலை உள்ளது என கூறியுள்ளார்.

உலக அளவில் திடீர் விலை உயர்வு ஏற்பட்டபோதும், அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் எரிபொருள் விலை தொடர்ந்து குறைவாகவே பராமரிக்கப்பட்டு வருகிறது என குறிப்பிட்டார்.

வீட்டுக்கு தேவையான சமையல் கியாஸ் சிலிண்டர் விநியோகத்தில் எந்த பாதிப்பும் இல்லை என்றும், எந்தவொரு விநியோகஸ்தரிடமும் சிலிண்டர் பற்றாக்குறை என்பது இல்லை என்றும் சிலிண்டர் விநியோகம் 93 சதவீதம் என்ற அளவில் திறமையாக கையாளப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இதேபோன்று வர்த்தக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விற்பனை அதிகரித்து உள்ளது என்றும் புலம்பெயர் மக்களின் வசதிக்காக 5 கிலோ சிலிண்டர் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது என்றும் கூறினார். பெட்ரோலிய இயற்கை எரிவாயுக்காக புதிதாக 5.68 லட்சம் நுகர்வோர்கள் பதிவு செய்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

## தேர்தல் நடத்தை விதிமீறல்? பிரதமருக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் புகாரை ஆராய தேர்தல் ஆணையம் முடிவு

**புதுடெல்லி, ஏப்.23:**

மகளிர் இடஒதுக்கீடு அமலாக்க மசோதா தோல்வி குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றியதன் மூலம் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக, பிரதமர் மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அளித்த புகார் ஆய்வு செய்யப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை விரைந்து அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவை இடங்களின் எண்ணிக்கையை அதிகபட்சம் 850 வரை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் கடந்த ஏப்ரல் 17-ஆம் தேதி எதிர்க்கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, நாட்டு மக்களுக்கு அரசுத் தொலைக்காட்சியில் உரையாற்றிய பிரதமர் மோடி, காங்கிரஸ், திமுக, திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். தமிழகம், மேற்கு வங்கத்தில் பேரவைத் தேர்தல் நடைபெறும் நிலையில், அரசு இயந்திரத்தை தனது பிரசாரத்துக்கு பிரதமர் தவறாக பயன்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

பிரதமரின் செயல், தேர்தல் நடத்தை விதிமுறைகளின் அப்பட்டமான மீறல் என்று கூறி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலங்களவை எம்.பி.சந்தோஷ் குமார் உள்ளிட்டோர், தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதினர். இதுதவிர, சமூக ஆர்வலர்கள், தனிநபர்கள் சுமார் 700 பேர் தேர்தல் ஆணையத்திடம் புகாரளித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு எதிரான தேர்தல் நடத்தை விதிமீறல் புகார் ஆய்வு செய்யப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரியில் ஏற்கெனவே தேர்தல் நிறைவடைந்த நிலையில், தமிழகத்தில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. அன்றைய நாள் வரை தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் வெடி விபத்து: 13 பேர் பலி – பிரதமர் மோடி இரங்கல்

**புதுடெல்லி, ஏப்.23:**

கேரள மாநிலம் திருச்சூர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் பலியாகி உள்ளனர். 40க்கும் மேற்பட்டோர் சிக்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

சம்பவ இடத்தில் மீட்புப் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். 26ஆம் தேதி நடைபெறும் பூரம் திருவிழாவுக்காக வைக்கப்பட்டிருந்த வெடிகள் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது.



இந்தநிலையில், திருச்சூர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

திருச்சூர் பட்டாசு உற்பத்தி ஆலை விபத்தில் பலர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களின் துயரத்தில் நானும் பங்கெடுக்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையட்டும் என அதில் கூறியுள்ளார்.

## திருச்சூரில் பட்டாசு வெடிவிபத்தில் 13 பேர் பலி: மிகுந்த வேதனையை அளிக்கிறது - பினராயி விஜயன்

**திருவனந்தபுரம், ஏப்.23:**

கேரளம் மாநிலம் திருச்சூரில் பூரம் திருவிழா ஏற்பாடுகளுக்காக வைத்திருந்த பட்டாசுகள் வெடித்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 40 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பிரசித்திபெற்ற திருச்சூர் பூரம் விழா ஏப்.26-ம் தேதி தொடங்கும் நிலையில் முண்டத்திகோடு பகுதியில் பட்டாசுகள் வைக்கப்பட்டன.

கொட்டகை அமைத்து பாதுகாக்கப்பட்டு வந்த பட்டாசுகள் கடும் வெப்பத்தால் திடீரென வெடித்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், கேரளாவின் திருச்சூரில் பட்டாசு செமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதல்-



மந்திரி பினராயி விஜயன் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

திருச்சூரில் பட்டாசு சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்து மிகுந்த வேதனையை அளிக்கிறது. காயமடைந்தவர்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதற்காக, முழு அரசு இயந்திரமும் களமிறக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேவைப்பட்டால், மாநிலத்திற்கு வெளியில் இருந்து வழங்கப்படும் சிறப்பு சிகிச்சை உட்பட, தேவையான அனைத்து சிகிச்சைகளும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவு, சுகாதாரம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளின் முயற்சிகளை உன்னிப்பாகக் கண்காணித்து ஒருங்கிணைக்க ஒரு பிரத்யேக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கல்கள். இந்தத் துயர நேரத்தில் கேரளம் அவர்களுடன் துணை நிற்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழாண்டு இந்திய பொருளாதாரம் 6.4% வளர்ச்சி: ஐ.நா. கணிப்பு

**புதுடெல்லி, ஏப்.23:**

நிகழாண்டு இந்திய பொருளாதாரம் 6.4 சதவீதம் வளர்ச்சியடையும் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா.வின் ஆசிய, பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த 2024-இல் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக இருந்த நிலையில், அது 2025-இல் 5.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இதற்கு ஆசிய கண்டத்தில் உள்ள இந்தியாவின் வலுவான வளர்ச்சி முக்கிய காரணமாகும். வலுவான நுகர்வு, சரக்கு மற்றும் சேவை வரிவிகிதம் குறைப்பு உள்ளிட்ட காரணங்களால் 2025-இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதம் வரை நகர்ந்தது. 2025-ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்ததைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதி சரிந்தது. இதனால் அப்போது இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகள் மிதமானது. எனினும் இந்தியாவின் வளர்ச்சிக்கு சேவைகள் துறை முக்கியக் காரணமாக அமைந்தது. இந்திய பொருளாதார வளர்ச்சி நிகழாண்டு 6.4 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு 6.6 சதவீதமாகவும் இருக்கும். நிகழாண்டு



இந்தியாவில் பணவீக்கம் (விலைவாசி உயர்வு விகிதம்) 4.4 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு 4.3 சதவீதமாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமைதிப் படை ஒத்துழைப்பு: இந்தியா, ஐ.நா. அதிகாரிகள் ஆலோசனை**

ஐ.நா. அமைதிப் படை உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இந்திய வெளியுறவு அமைச்சக செயலர் சிபி ஜார்ஜ், ஐ.நாவின் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான உதவி பொதுச்செயலர் காலித் கியாரி ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டதாக ஐ.நா.வுக்கான இந்திய தூதரகம் சமூக ஊடகத்தில் செவ்வாய்க்கிழமை பதிவிட்டது.

கடந்த 1948-ஆம் ஆண்டுமுதல் ஐ.நா. அமைதிப்படை பணிகளுக்கு 2.75 லட்சத்துக்கும் அதிகமான வீரர்களை இந்தியா அனுப்பியுள்ளது. இதன்மூலம், அந்தப் பணிகளுக்குப் பெரும் பங்களிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

## பல தார மணத்துக்கு தடை: மேற்கு வங்கத்தில் அமித் ஷா உறுதி

**கொல்கத்தா, ஏப்.23:**

மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு 23, 29ம் தேதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. முதல் கட்டத்தேர்தலுக்கான கடைசி கட்டப் பிரச்சாரம் நிறைவடைந்தது.

முன்னதாக டார்ஜிலிங் மாவட்டம் சிலிகுரியில் நேற்று நடைபெற்ற பாஜக பிரச்சார பொதுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் அமித் ஷா கலந்து கொண்டு பேசியதாவது: மேற்கு வங்கத்தில், வெளிநாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் ஊடுருவியுள்ளனர். பாஜக ஆட்சிக்கு வந்தால், இங்கு ஊடுருவலை நிச்சயமாக தடுத்து நிறுத்துவோம். ஊடுருவல்காரர்கள் இல்லாத மாநிலமாக மேற்கு வங்கத்தை மாற்றுவோம்.



அதேபோல் நிலங்களை அபகரிக்கும் மாபியா கும்பலையும் விரட்டுவோம். மேலும், புகழ் பெற்ற இரும்புத் தாது உற்பத்தியை மேம்படுத்தி மாநிலத்தை வளர்ச்சி அடையச் செய்வோம். இதன் மூலம் இங்குள்ள வேலையற்ற இளைஞர்கள் அதிக வேலை வாய்ப்பைப் பெறுவர். மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள குல்டி பகுதி தான், நாட்டிலேயே அதிக இரும்புத் தாது உற்பத்தி மையமாக ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் மம்தா ஆட்சிக்காலத்தில் குல்டி தனது புகழை இழந்தது. பாஜக ஆட்சிக்கு வந்தால் மீண்டும் குல்டி பகுதியை இரும்புத் தாது உற்பத்தி மையமாக மாற்றுவோம். மேலும், இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சமூகத்தில் பலதார திருமணங்கள் இன்னும் வழக்கத்திலேயே உள்ளது. அந்த சமூகத்தினர் 4 திருமணங்கள் வரை செய்து கொள்கின்றனர். இதனால் திருமணமான அந்தப் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பல தார மணத்தைத் தடை செய்வோம். இவ்வாறு அவர் பேசினார்.

## ஏழுமலையானுக்கு சேவை செய்வது எனது பாக்கியம்: தேவஸ்தான நிர்வாக அதிகாரி பெருமிதம்

**திருப்பதி, ஏப்.23:**

திருப்பதியில் உள்ள தேவஸ்தான நிர்வாக அலுவலகத்தில் நிர்வாக அதிகாரி எம்.ரவிசந்திரா தலைமையில் தேசிய சிவில் சேவைகள் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இதில் ரவிசந்திரா பேசியதாவது: ஏழுமலையானுக்கு சேவை செய்வது எனது பாக்கியம். பக்தர்களுக்கு உண்மையான அன்பு மூலம் செய்யும் சேவையே உன்னதமானது. தேசிய சிவில் சேவைகள் தினம் என்பது ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு மட்டுமே சம்பந்தப்பட்டதில்லை. சேவை செய்யும் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். மக்கள் - அரசு இடையே அரசு பணியாளர்கள் ஒரு சேவகர்களாக, பாலமாக பணியாற்றிட வேண்டும். நாம் அனைவரும் ஓய்வு பெறும் வரை அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும். அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சட்டங்களை மீறாமல் பணி செய்திட வேண்டும் என்பது எனது வேண்டுகோள். அதேபோல், அனைவருக்கும் புரியும் மொழியில் நாம் பேசினால்தான் விஷயமும் விரைவாக விளங்கும். முடிந்த அளவிற்கு தெலுங்கில் பேச பழகுங்கள். இவ்வாறு ரவிசந்திரா கூறினார். இந் நிகழ்ச்சியில், இணை நிர்வாக அதிகாரிகள் வீர பிரம்மம், டாக்டர் ஏ.சரத், தலைமை பாதுகாப்பு அதிகாரி முரளி கிருஷ்ணா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இந்திய விமானங்களுக்கு தடையை நீட்டித்தது பாகிஸ்தான்!




**புதுடெல்லி, ஏப்.23:**

இந்திய விமானங்கள் தங்கள் நாட்டு வான் பரப்பை பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை பாகிஸ்தான் மேலும் ஒரு மாதம் நீட்டித்தது. கடந்த 2025, ஏப்ரல் 24-இல் இந்திய விமானங்களுக்கு பாகிஸ்தான் விதித்த தடை இப்போது வரை தொடர்கிறது.

கடந்த ஆண்டு பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுப்பதை அறிந்த பாகிஸ்தான், இந்திய விமானங்கள் தங்கள் வான் பரப்பை பயன்படுத்த தடை விதித்தது. இதையடுத்து, இந்தியாவும் தங்கள் வான் பரப்பை பயன்படுத்த பாகிஸ்தானுக்கு தடை விதித்தது.

இதற்கு முன்பு, 1999 கார்கில் போர், 2019 புல்வாமா தாக்குதலின்போது இதுபோன்ற வான் பரப்பை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. பின்னர் பிரச்னை தீர்ந்ததும் தடை நீக்கப்பட்டது. பாகிஸ்தான் விதித்த இந்தத் தடையால் ஐரோப்பா, வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் இந்திய பயணிகள் விமானங்கள் மாற்றுப் பாதையில் செல்வதால் கூடுதல் செலவு ஏற்பட்டு வருகிறது.

தடை நீட்டிப்பு தொடர்பாக பாகிஸ்தான் விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்ட செய்தியில், ‘இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட, குத்தகைக்கு விடப்பட்ட பயணிகள் மற்றும் ராணுவ விமானங்களுக்கான தடை 2026 மே 25 காலை 5 மணி வரை நீட்டிக்கப்படுகிறது’ என்று கூறப்பட்டுள்ளது.




# ஒசூர்: தேர்தலில் வாக்களிக்க பெங்களூருவிலிருந்து காரில் திரும்பியபோது விபத்து

## 3 இளைஞர்கள் உயிரிழப்பு

**ஒசூர், ஏப்.23:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் இன்று அதிகாலை நிகழ்ந்த கோர விபத்தில், பெங்களூரில் இருந்து தேர்தலில் வாக்களிக்க ஊர் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் வீரமணி (25) என்பவர் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அவருடன் அதே பகுதியில் உள்ள சிப்ஸ் கடைகளில் வேலை செய்து வந்த பிரதீப் மற்றும் மாரி, சதீஷ் குமார் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்ற வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தங்களது சொந்த ஊரான பென்னாகரத்திற்கு காரில் புறப்பட்டுள்ளனர்.

அதிகாலை சுமார் 4 மணி அளவில், ஒசூர் அருகே உள்ள சானமாவு வனப்பகுதி வழியாக கார் சென்று கொண்டிருந்தது. அப்போது உடுமலைபேட்டையில் இருந்து ஒசூர் நோக்கி வந்த தனியார் சொகுசு பேருந்தும், காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த பயங்கர மோதலில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. காரில் பயணம் செய்த வீரமணி (25), பிரதீப், மாரி ஆகிய மூன்று இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். இவர்களுடன் பயணித்த சதீஷ் குமார் (25) என்பவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் தற்போது சிகிச்சைக்காக ஒசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உத்தனப்பள்ளி போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தலில் வாக்களிக்க ஆர்வத்துடன் ஊருக்குச் சென்ற இளைஞர்கள் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பெட்ரோல் குண்டு வீசி 7 பேர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கு தலா 7 ஆயுள் சிறை

**கரூர், ஏப்.23:** மதுரை அவனியாபுரத்தில் வாகனங்கள் மீது பெட்ரோல் குண்டு வீசி 7 பேர் கொல்லப்பட்ட வழக்கில் 9 பேருக்கு வாழ்நாள் சிறை தண்டனையும், தலா ரூ.27.90 லட்சம் அபராதமும் விதித்து கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

மதுரை அவனியாபுரத்தில் 2012-ம் ஆண்டு தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்றுவிட்டு திரும்பிய வாகனங்கள் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதில் 7 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக மதுரை மேல அனுப்பானடியைச் சேர்ந்த ராமர்பாண்டி (36), மதுரை மாவட்டம் சிந்தாமணியைச் சேர்ந்த மணிகண்டன் (37), கார்த்திக் (36), முத்துவிஜி (22), சந்திரசேகர் (31), சோனையா (31), நாகராஜ் (31), முத்துக்கருப்பன் (31), மோகன் (38), விக்னேஷ் (33), சந்தோஷ் (33) ஆகிய 11 பேரை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கில் முத்து விஜி கொல்லப்பட்ட நிலையில், குற்றவாளிகளின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறியதால் இவ்வழக்கு கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு 2017-ம் ஆண்டு மாற்றப்பட்டது. மேலும், இவ்வழக்கில் கரூர் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு திரும்பிய ராமர் பாண்டி அரவக்குறிச்சி அருகே 2024-ம் ஆண்டு கொல்லப்பட்டார்.

கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கில், 69 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு, உயிரிழந்த 2 பேர் தவிர மீதியுள்ள 9 பேரும் குற்றவாளிகள் என்று மார்ச் 23-ம் தேதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன்பிறகு தண்டனை விவரம் அறிவிப்பு ஏப்.6, ஏப்.15, ஏப்.21 (நேற்று) ஆகிய தேதிகளுக்கு 3 முறை தள்ளிவைக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் மாவட்ட நீதிபதி கே.ஹெச். இளவழகன் நேற்று தீர்ப்பு வழங்கினார்.

சலுகைகள் கிடையாது

அதில், குற்றவாளிகள் 9 பேருக்கும் தலா 7 ஆயுள் சிறை தண்டனை, கொலை முயற்சி வழக்கில் 10 ஆண்டுகள், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்ததாக (பிபிடிஎல்) இரு பிரிவுகளில் 5 மற்றும் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததுடன், தண்டனையில் எவ்வித சலுகைகளும் வழங்க முடியாது என்றும் தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கவும் உத்தரவிட்டார்.

மேலும், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.27.90 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். இதையடுத்து, குற்றவாளிகள் 9 பேரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மயிலாப்பூர் திமுக வேட்பாளரின் உதவியாளர் வீட்டில் கட்டுக்கட்டாக பணம் பறிமுதல்

**சென்னை, ஏப்.23:** தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நாளை (வியாழக்கிழமை) நடக்கிறது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் பட்டுவாடா செய்வதை தடுக்க பறக்கும் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



இந்த நிலையில், மயிலாப்பூர் தொகுதி திமுக வேட்பாளர் தா. வேலுவின் தனி உதவியாளராக இருப்பவர் சத்தியமூர்த்தி. இவரது வீட்டில் வாக்களர்களுக்கு பட்டுவாடா செய்ய பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் அதிகாரிகளுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில், தேர்தல் பறக்கும் படையினர் சத்தியமூர்த்தியின் வீட்டில் இன்று அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது வீட்டில் ஒரு பேக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 ரூபாய் நோட்டுக் கட்டுகளை பறிமுதல் செய்தனர். மொத்தம் ரூ. 2 கோடி ரொக்கம் இருக்கும் என கூறப்படுகிறது. பணத்தை எண்ணுவதற்காகப் பிரத்யேக இயந்திரங்களை அதிகாரிகள் கொண்டு வந்தனர். பணம் மட்டுமின்றி, அந்த வீட்டில் இருந்து வாக்காளர் பட்டியல்கள், சில முக்கிய டைரிகள் மற்றும் தேர்தல் தொடர்பான ரகசிய ஆவணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கட்சி நிர்வாகிகளுக்கு பணம் விநியோகம் செய்ததற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக தேர்தல் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இன்று தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக வேட்பாளரின் உதவியாளர் வீட்டில் கட்டுக்கட்டாக பணம் சிக்கியுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் மயிலாப்பூர் தொகுதியில் மட்டுமின்றி தமிழக அரசியல் வட்டாரத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அரசுப் பேருந்து ஓட்டுநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக் கோரி வழக்கு

## போக்குவரத்து துறை பதிலளிக்க உத்தரவு

**மதுரை, ஏப்.23:** அரசுப் பேருந்து ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக்கோரிய வழக்கில் போக்குவரத்துத் துறை பதில் மனு தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தமிழ்நாடு மாநில போக்குவரத்து ஊழியர் கூட்டமைப்பு சார்பில், உயர் நீதிமன்ற அமர்வில் தாக்கல் செய்த மனு: அரசுப் போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்களுக்கான பணிகளைச் செய்யாமல், அலுவலக வேலை உள்ளிட்ட வேறு பணிகளில் ஈடுபடுத்தி சம்பளம் வழங்குவது சட்டவிரோதம்.

மேலும், 2018-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகள் மற்றும் 1995, 2005 ஒப்பந்தங்களின்படி, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை பிற பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது. ஆயிரக்கணக்கான பணியாளர்கள் "வேறு பணிகளில்" இருப்பதால், பணிச்சுமை அதிகரித்து, மீதமுள்ள பணியாளர்கள் அதிக நேரம் வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை அவர்களது இயல்பான பணிகளில் மட்டுமே ஈடுபடுத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுருந்தது. இந்த மனு நீதிபதிகள் சதீஷ் குமார், ஜோதி ராமன் முன்பு விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாளை வெள்ளியங்கிரி மலை, குற்றாலம் அருவிக்கு செல்ல தடை!!



**கோவை, ஏப்.23:** சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாளை வெள்ளியங்கிரி மலை, கோவை குற்றாலம் அருவிக்கு செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக வனத்துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்;

சட்டப்பேரவைத்தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் வகையில் நாளை ஒரு நாள் மட்டும் கோவை குற்றாலம் அருவி மூடப்படுகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வெள்ளியங்கிரி மலைக்கு புதன்கிழமை மாலை 6 மணி முதல் நாளை நள்ளிரவு 12 மணி வரை செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை வழக்கம் போல் வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள் செல்லலாம், இந்த உத்தரவை மக்கள் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட நேரத்தில் கோவை குற்றாலம் அருவி, வெள்ளியங்கிரி மலைக்கு மக்கள் யாரும் செல்ல முயற்சி செய்ய வேண்டாம். இந்த தடை மீறி குற்றாலம் அருவி, வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் செல்வதை தடுக்க வனத்துறையின்வேட்டைதடுப்பு காவலர்கள் மற்றும் யானை பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல்: அர்ச்சனா பட்நாயக்

**சென்னை, ஏப்.23:** தமிழகத்தில் நேற்று (ஏப்.21) மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த நிலையில், இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இதில் ரொக்கப் பணம் மட்டும் ரூ.543 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.



மேலும், இதுவரை 4.18 லட்சம் தபால் வாக்குகள் பதிவாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நாளை (ஏப்.23) ஒரே கட்டமாக நடைபெற உள்ள நிலையில், தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "தமிழகத்தில் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இன்று வரை தபால் ஓட்டுக்களை போட முடியும். இதுவரை 4,18,541 வாக்குகள் போடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 33,133 இடங்களில் மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 249 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் பணியாளர்கள் நடத்தும் வாக்குச்சாவடிகள் 325 ஆக உள்ளது, இளைஞர்கள் மட்டுமே நடத்தும் வாக்குச்சாவடிகள் 79 ஆக உள்ளது. 5,949 வாக்குச்சாடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 1,06,418 வாக்குச்சாவடி இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. இதேபோல், 75,064 கட்டுப்பாட்டு கருவிகளும், 75,064 விவி பேட் கருவிகளும் கையிருப்பில் உள்ளன. தேர்தல் பணிக்கு போதிய அளவு இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. வாக்குச்சாவடி இயந்திரங்கள் மற்றம் கன்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை பொருத்தவரை 20 சதவீதம் அளவுக்கு கூடுதலாக உள்ளன. விவிபேட் 30 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கையிருப்பில் உள்ளது.

வாக்குப்பதிவு மையங்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 68 அதிகாரிகள் பணியில் இருப்பார்கள். பாதுகாப்புப் பணிகளில் மொத்தம் 83,875 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கால் சென்டர் (எண் - 1950), மீடியா கண்காணிப்பு, செலவு கண்காணிப்பு, வாக்குப்பதிவு கண்காணிப்பு என மொத்தம் 4 கட்டுப்பாட்டு அறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றன.

தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள் காரணமாக இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், மதுபானங்கள், பரிசுப் பொருட்கள், ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில், ரூ.543 கோடி அளவுக்கு ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடக பதிவுகள் தொடர்பாக 243 விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 163 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 தவறான சமூக ஊடக பதிவுகளின் யுஆர்எல் பிளாக் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தரப்புகளில் இருந்து 5,634 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அவற்றில் 17 புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மே 4ம் தேதி மொத்தம் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்" என்றார்.

# கொத்தனார் கொலையில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்ய கோரி மறியல்

**வத்தலக்குண்டு, ஏப்.23:** வத்தலக்குண்டு அருகே கொத்தனார் கொலை வழக்கில் அனைவரையும் கைது செய்ய கோரி உறவினர்கள் காவல் நிலையம் முன்பு சாலை மறியலில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.வத்தலக்குண்டு அருகே பழைய வத்தலக்குண்டு இந்திரா காலனியை சேர்ந்தவர் விஜயபிரபு (29). கொத்தனார்.

திருமணமாகவில்லை. கடந்த ஏப்.19ம் தேதி இரவு விஜயபிரபு டேபிள் பேன் ஒன்றை வாங்கி பெரியகுளம் சாலையில் உள்ள தனியார் மதுபான கடை அருகில் வைத்திருந்தார். சிறிதுநேரத்தில் அந்த டேபிள் பேன் மாயமானது. விஜயபிரபு விசாரித்த போது, கணவாய்பட்டி தனியார் பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கும் கணவாய்ப்பட்டி ஆசிரமம் தெருவை சேர்ந்த மணி என்பவர் திருடி சென்றதாக தெரிகிறது.

இதையடுத்து மறுநாள் அதாவது நேற்று முன்தினம் அங்கு சென்ற விஜயபிரபு மற்றும் அவரது உறவினர்கள் மணியிடம் டேபிள் பேனை கேட்ட போது பெட்ரோல் பங்கு அலுவலகத்திற்குள் இருப்பதாகவும், சிறிதுநேரத்தில் வந்து எடுத்து கொடுப்பதாகவும் கூறியுள்ளார். இதை தொடர்ந்து விஜயபிரபு மற்றும் அவரது உறவினர்கள் பெட்ரோல் பங்க் தகர கொட்டகையில் அமர்ந்திருந்தனர்.

அந்த நேரத்தில் கணவாய்ப்பட்டி வடக்கு தெருவை சேர்ந்த முத்து என்பவர் அவர்களை வீடியோ எடுத்துள்ளார். இதனால், விஜயபிரபு மற்றும் முத்து தரப்பினருக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து முத்து அதே பகுதியை சேர்ந்த சங்கிலி உள்பட சிலரை வரவழைத்து விஜயபிரபுவையும் அவரது உறவினர்கள் ராஜா, சத்தியமூர்த்தி, நடுப்பட்டி ராஜா ஆகியோரை கடுமையாக தாக்கி உள்ளனர். அப்போது விஜயபிரபுவை மரக்கட்டை மற்றும் இரும்புகம்பியால் அடித்து தாக்கியதில் அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வத்தலக்குண்டு போலீசாரிடம் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டுமென கூறி விஜயபிரபு மற்றும் அவரது உறவினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு அப்பகுதியிலே விஜயபிரபு உடலை வைத்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வத்தலக்குண்டு-கெங்குவார்பட்டி சாலையில் போக்குவரத்து பாதிப்படைந்தது.

இதையடுத்துஇன்ஸ்பெக்டர்கவுதம் மற்றும் போலீசார் வழக்குப்பதிவு செய்து முத்து, சங்கிலி ஆகியோரை கைது செய்தனர். அதன்பின்பே விஜயபிரபு உறவினர்கள் மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். பின்னர் போலீசார் விஜயபிரபு உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காகவத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் நேற்று காலை விஜயபிரபு உறவினர்கள் 100க்கும் மேற்பட்டோர் இச்சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டுமென கூறி வத்தலக்குண்டு காவல் நிலையம் முன்பு சாலையில் அமர்ந்து மறியல் போராட்டம் நடத்தினர்.

இதனால் அனைத்து வாகனங்களும் மாற்று சாலை வழியாக சென்றது. பின்னர் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி அனைவரையும் கைது செய்வதாக உறுதி கூறியதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. இந்த போராட்டத்தால் அப்பகுதியில் சுமார் 1 மணிநேரம் பாதிக்கப்பட்டது.

# மெட்ரோ ரயில் பயணத்துக்கு மே 1 முதல் சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற திட்டம்

**சென்னை, ஏப்.23:** மெட்ரோ ரயில் பயண அட்டை பயன்பாட்டிலிருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மே 1-ம் தேதி முதல், முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சிங்கார சென்னை அட்டைக்கு மாற்றிக்கொள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.




சென்னை மெட்ரோ ரயிலில் டிக்கெட் எடுக்க, கவுன்ட்டர்களில் பயணிகள் வரிசையில் நெடுநேரம் காத்திருப்பதைத் தவிர்க்க சி.எம்.ஆர்.எல். பயண அட்டை கடந்த 2015-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 5 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் இந்த அட்டையை பயன்படுத்தும்போது, 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி கிடைக்கும்.

இதற்கிடையில் தேசிய பொது போக்குவரத்து அட்டையை (சிங்கார சென்னை அட்டை) மெட்ரோ ரயில் நிறுவனம் கடந்த 2023-ம் ஆண்டு ஏப்.14-ம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்த அட்டையை ஊக்கப்படுத்த மெட்ரோ ரயில் நிறுவனம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வந்தது.

மேலும், சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற கடந்த ஆண்டு ஏப்.1-ம் தேதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. 41 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் படிப்படியாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன பயண அட்டைகளை ரீசார்ஜ் செய்யும் வசதி நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து பயண அட்டையில் உள்ள மீதித் தொகையை மெட்ரோ ரயில்களில் பயணிப்பதற்கும், மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனம் நிறுத்துவதற்கும் பயன்படுத்தி வந்தனர்.

இந் நிலையில் மெட்ரோ ரயில் நிறுவன பயண அட்டை பயன்பாட்டிலிருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மே 1-ம் தேதி முதல், முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: மெட்ரோ ரயில்களில் பயணிக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக 'சிங்கார சென்னை அட்டை (தேசிய பொது போக்குவரத்து அட்டை)' அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, நாடு முழுவதும் உள்ள பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில், மே 1-ம் தேதிமுதல், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிங்கார சென்னை அட்டைக்கு முழுமையாக மாற திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மெட்ரோ ரயில்களில் பயணம் செய்யவும், வாகன நிறுத்தங்களை பயன்படுத்தவும், பயணிகள் தங்களது பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொபைல் செயலி (Mobile App) மூலம் பெறப்படும் QR Stored Value Pass (SVP) அல்லது தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# இளையான்குடியில் ராமானுஜர் ஜெயந்தி விழா





மானாமதுரை ஏப் 23 சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மேதகு ராணி சாஹிபா ஸ்ரீமத் முத்து விஜயரகுநாத கௌரிவல்லப டி எஸ் கே மதுராந்தகி நாச்சியார் அவர்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஸ்ரீ மதன வேணுகோபாலப்பெருமாள் திருக்கோவிலில் 23'ம் ஆண்டு இராமானுஜர் ஜெயந்தி விழா நடைபெற்றது. இதில் காலை சித்திரை திருவாதிரை நட்சத்திரத்தில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இராமானுஜ நூற்றந்தாதி பாராயணத்துடன் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

# தேக்கடி ஏரியின் நீர்மட்டம் சரிவு



**கடலூர், ஏப்.23:** தேக்கடி ஏரியில் நீர்மட்டம் குறைந்ததையடுத்து படகு சவாரி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.கேரளம் மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் குமுளியை அடுத்துள்ள தேக்கடி நீர்த்தேக்கம் முக்கிய சுற்றுலாத் தலமாக திகழ்கிறது.

இங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்கின்றனர். பெரியாறு புலிகள் காப்பக வனப்பகுதிக்குள் அமைந்திருக்கும் தேக்கடி ஏரியில் படகு சவாரி செய்ய சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருகின்றனர்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் தடையை மீறி 12 மீட்டர் நீளத்திற்கும் அதிகமாக உள்ள பேருந்துகள் இயக்கம்.!! பொதுமக்கள் புகார்' படகு சவாரி செய்யும்போது சுற்றியுள்ள வனப்பகுதியில் திரியும் யானை, மான், புலி காட்டெருமை, செந்நாய் உள்ளிட்ட வனவிலங்குகளையும், பறவை இனங்களையும் கண்டுகளிக்கலாம். இது தவிர யானை சவாரி, நேச்சர் வாக், மூங்கில் படகு சவாரி, நேச்சர் கேம்ப் உள்ளிட்ட இயற்கை கலந்த பொழுதுபோக்கு அம்சங்களும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகின்றன.

தேக்கடி ஏரியின் நீர்மட்டம் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை சார்ந்தே இருக்கும். அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த 4 மாதங்களாக போதிய மழை இல்லாததால் அணையின் நீர்மட்டம் வெகுவாக சரிந்துள்ளது.

152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் தற்போது 110 அடியாக குறைந்துள்ளது. இதனால், தேக்கடி அணையின் நீர்மட்டமும் குறைந்துள்ளது. தேக்கடி ஏரியில் கேரள வனத்துறை மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் 7 படகுகள் தினசரி ஐந்து முறை இயக்கப்படுகின்றன.

தற்போது ஏரியின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் படகுகளின் அடிப்பாகம் சேற்றில் சிக்கியோ அல்லது ஏரியில் உள்ள மரங்களில் தட்டியோ விபத்து ஏற்படும் நிலை உள்ளது. இதனால், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி, ஏரியில் பயணிக்கும் படகுகளின் எடையை குறைக்கும் வண்ணம், பயணிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

தேக்கடி ஏரியில் அம்மாநில வனத்துறை சார்பில் வனஜ்யோத்ஸ்னா, வனதர்ஷன், வனலட்சுமி, பெரியாறு உள்ளிட்ட பெரிய படகுகளும், கேரளா சுற்றுலா மேம்பாட்டு கழகத்தின் சார்பில் ஜலயாத்திரா, ஜலஜ்யோதி ஆகிய இருதளங்கள் கொண்ட படகுகளும் இயக்கப்படுகின்றன.

120 பேர் பயணிக்கும் இருதள படகுகளில் தற்போது 50 பேரும், 60 பேர் பயணிக்கும் படகுகளில் தற்போது 45 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். 20 பயணிகள் ஏற்றிச்செல்லும் சிறிய படகுகளிலும் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

தினசரி 1,500 பேருக்கும் மேல் படகு சவாரி செய்து வந்த நிலையில். தற்போது 700 பேர் மட்டுமே படகு சவாரி செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து, சுற்றுலாத்துறை மட்டுமன்றி அதை சார்ந்த தங்கும் விடுதிகள், ஓட்டல்கள், வணிகம் மற்றும் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இன்னும் அணையின் நீர்மட்டமும், ஏரியின் நீர்மட்டமும் 108 அடிக்கு கீழ் குறையும் பட்சத்தில், பயணிகளின் பாதுகாப்பு காரணங்களுக்காக ஏரியில் படகு சவாரி முற்றிலும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்பதை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் இருந்து 1.88 லட்சம் பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம்




**சென்னை, ஏப்.23:** தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நாளை நடைபெறுகிறது. இதையொட்டி அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் நேற்று முதல் இயக்கப்பட்டன. சென்னையில் பல்வேறு பகுதியில் தங்கி தொழில் மற்றும் வேலை செய்து வரும் மக்கள் ஓட்டுப்போட சொந்த ஊர்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றிரவு சென்னையில் இருந்து 1,88,705 பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு நேற்று மட்டும் 3,431 பஸ்கள் இயக்கப்பட்டுள்ளன. இன்று 3,570 சிறப்பு பஸ்களும் நாளை மதியம் ஒரு மணி வரை 600 சிறப்பு பஸ்களும் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. நாளை சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் சென்னை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து சொந்த ஊருக்கு மக்கள் படையெடுத்துள்ளனர்.

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதால் மக்கள் அவதி அடைந்துள்ளனர். சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்ல இரண்டு சிறப்பு ரெயிலும், கோவைக்கு ஒரு சிறப்பு ரெயிலும் இன்று கூடுதலாக இயக்கப்படுகிறது.

# கடலூர்: மது போதையில் மாமனார், மாமியாரை கத்தியால் குத்திய மருமகன் - அதிர்ச்சி சம்பவம்





**கடலூர், ஏப்.23:** கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த கார்குடல் கிராமத்தை சேர்ந்த கனிமொழி. இவருக்கும் வடபாதியை சேர்ந்த காந்தி என்பவருக்கும் கடந்த 11 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. காந்தி, கனிமொழி தம்பதிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

இதனிடையே, மதுபோதைக்கு அடிமையான காந்தி அடிக்கடி குடித்துவிட்டு கனிமொழியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். மேலும், கனிமொழி நடத்தையில் காந்திக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை கனிமொழியிடம் காந்தி மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதனால் கனிமொழி தனது குழந்தைகளை அழைத்துக்கொண்டு கார்குடல் கிராமத்தில் உள்ள தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

வீட்டில் மனைவி இல்லாததை அறிந்த காந்தி மதுபோதையில் மாமனார் வீட்டிற்கு சென்றுள்ளார். மாமனார் வீட்டிற்கு சென்ற காந்தி அங்கு வைத்து மாமனார் செல்வமணியிடம் மதுபோதையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். காந்தியை செல்வமணி சமாதானப்படுத்த முயன்றுள்ளார்.

அப்போது ஆத்திரமடைந்த காந்தி தான் மறைத்து கொண்டு வந்த கத்தியால் மாமனார் செல்வமணியை சரமாரியாக குத்தினார். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த செல்வமணியின் மனைவி லதா தாக்குதல் நடத்திய மருமகன் காந்தியை தடுக்க முயன்றார்.

ஆனால் மதுபோதையில் இருந்த காந்தி தனது மாமியார் லதாவையும் கத்தியால் சரமாரியாக குத்தினார். பெற்றோரை தனது கணவன் கத்தியால் குத்தியதை கண்டு அதிர்ச்சியடைந்த கனிமொழி பக்கத்து வீட்டிற்குள் புகுந்து உயிர் தப்பினார்.

அதேவேளை, கத்திக்குத்து தாக்குதலில் செல்வமணி, லதா படுகாயமடைந்த நிலையில் அவர்களின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் விரைந்து சென்றனர். அப்போது வீட்டிற்குள் இருவரும் ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர்.

உடனடியாக இருவரையும் மீட்ட அக்கம்பக்கத்தினர் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமத்தனர்.

அங்கு இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மருமகன் கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்த செல்வமணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். செல்வமணியின் மனைவி லதாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், மாமனாரை கத்தியால் குத்திக்கொலை செய்துவிட்டு தப்பியோடிய காந்தியை தீவிரமாக தேடி வருகின்றனர். மனைவி நடத்தையில் சந்தேகமடைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட மதுபோதையில் மாமனர், மாமியாரை இளைஞர் கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வாக்களிக்க 12 ஆவணங்களை அடையாளமாக காட்டலாம்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**சென்னை, ஏப்.23:** தமிழகத்தில் நாளை (வியாழக்கிழமை) சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்களிப்பதற்கு வசதியாக, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், 'இசிஐநெட்' இணையதளத்திற்கு சென்று, வாக்காளர் அடை யாள அட்டை எண்ணை பதிவு செய்தோ அல்லது பதிவு செய் யப்பட்ட செல்போன் எண்ணை வைத்தோ புதிய டிஜிட்டல் வாக்காளர் அட்டையை 'ஓ.டி.பி.' மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒருவேளை வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார் உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களைக் காட்டி வாக்களிக்கலாம்.

அதன் விவரம் பின்வருமாறு:-

1.ஆதார் அட்டை

2.புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது தபால் கணக்குப் புத்தகங்கள்

3.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

4.தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை அல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

5.ஓட்டுனர் உரிமம்

6.பான் கார்டு

7.தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலை மைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

8. பாஸ்போர்ட்டு

9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10. மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11. நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற அல்லது சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

12. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான ஊனமுற்றோர் அடையாள அட்டை. ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்க லாம். பூத் சிலிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு, வாக்களிப்பதற்கு செல்லத்தக்கதல்ல. வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிட்டால், இவற்றில் எந்த ஆவணத்தை வைத்தும் வாக்களிக்க முடியாது.

## அரசியல் கார்னர்

# தமிழ்நாட்டில் 37 நாட்களாக நடந்த தேர்தல் பரப்புரை ஓய்ந்தது!



**சென்னை, ஏப்.23:** தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே.4ம் தேதி நடைபெற்று, அன்றே முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளன.

இந்நிலையில் தேர்தலுக்கான பிரசாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி, வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாகவே பிரசாரம் நிறைவு செய்யப்பட வேண்டும். அதன்படி இன்று மாலையுடன் நிறைவடைந்தது. இன்று இறுதி பிரசார நாள் என்பதால் அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். புதிதாக கட்சித் தொடங்கி தவெக தலைவர் விஜய் சென்னை நந்தனத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துடன் தனது பிரசாரத்தை நிறைவு செய்தார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது சொந்த மாவட்டமான சேலத்தில் தனது இறுதிப் பிரசாரத்தை மேற்கொண்டு நிறைவு செய்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொளத்தூரில் தொகுதியில் இறுதியாக பிரசாரம் மேற்கொண்டு 6மணிக்குள் முடித்தார்.

# மு.க.ஸ்டாலினின் ஆட்சியை பொற்கால ஆட்சியாகவே மக்கள் கருதுகிறார்கள் - செல்வப்பெருந்தகை

**சென்னை, ஏப்.23:** தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவின் போது தமிழக மக்கள் தங்களது எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டியது மிகமிக அவசியமாகும். தமிழக அரசியல் மற்றும் தேசிய அளவிலான அரசியலையும் மனதில் வைத்துக் கொண்டு எந்த கூட்டணிக்கு வாக்களிப்பது என்பதை வாக்காளப் பெருமக்கள் மிக ஆழமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளாக மு.க. ஸ்டாலின் தலைமையில் மிகச் சிறப்பான ஆட்சி செயல்பட்டதை எவரும் மறுக்க முடியாது. 2021 சட்டமன்றத் தேர்தலின் போது கொடுத்த மொத்த வாக்குறுதிகளில் 505 இல் 400-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி சாதனை புரிந்திருக்கிறார். மீதியுள்ள வாக்குறுதிகள் மத்திய பா.ஜ.க. அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் நிறைவேற்ற முடியவில்லை.

இந்த சட்டமன்ற தேர்தலில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கு தமிழ்நாட்டு மக்களிடம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டதோடு, சூறாவளி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தியலை மு.க. ஸ்டாலின் உருவாக்கியிருக்கிறார். கடந்த 12 ஆண்டுகளாக மத்தியத்தில் ஆட்சி செய்கிற பா.ஜ.க., தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டிய நிதி பகிர்வில் பாரபட்சம், புதிய கல்விக் கொள்கை என்கிற போர்வையில் மும்மொழி திணிப்பு, கிராமப்புற மாணவர்களை பாதிக்கும் நீட் தேர்வு திணிப்பு, வெள்ள நிவாரண நிதி புறக்கணிப்பு, மெட்ரோ ரயில் திட்ட புறக்கணிப்பு என வஞ்சிக்கப்பட்ட பட்டியல் நீண்டு கொண்டே போகும். அந்தளவிற்கு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய பா.ஜ.க. அரசு இதுவரை நடத்தியிருக்கிறது.

ஆனால், நிதிப் பகிர்வில் எத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்டாலும் அதையெல்லாம் எதிர்கொண்டு, மாநில அரசின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு வளர்ச்சி திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருகிற மத்திய பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்திருக்கிற அ.தி.மு.க., இதுவரை தமிழ்நாட்டின் உரிமைக்காக பேசியது கிடையாது.

இன்றைய அ.தி.மு.க. என்பது பா.ஜ.க.வின் ஊதுகுழலாக, கைப் பாவையாக, அடிமை கட்சியாக மாறி விட்டது. அ.தி.மு.க. என்ற முகமூடி அணிந்து கொண்டு பா.ஜ.க. தமிழ்நாட்டில் நுழைய முற்படுகிறது. அதனால் தான் தலைவர் ராகுல்காந்தி, முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல் என்பது தமிழ்நாட்டிற்கும், டெல்லிக்கும் நடைபெறுகிற தேர்தல் என்று பிரகடனம் செய்தனர். இதன்மூலம் பா.ஜ.க.வின் ஆதிக்கத்தில் சிக்கியுள்ள அ.தி. மு.க. கூட்டணியை புறக்கணிக்க வேண்டியது தமிழ்நாட்டு மக்களின் முதல் ஜனநாயகக் கடமையாகும்.

கடந்த 5 ஆண்டுகளாக எந்தவித ஊழல் குற்றச்சாட்டுகளோ, முறைகேடுகளோ, சட்டம் ஒழுங்கு சீர்குலைவோ எதுவும் ஏற்படாமல் மாநில உரிமைகளை பாதுகாக்க தொடர்ந்து உரிமைக் குரல் எழுப்பி வருகிற மு.க. ஸ்டாலின் அவர்கள், மாநிலம் கடந்து தேசிய அளவிலும் பெரும் பாராட்டுகளை பெற்று வருகிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சி என்பது தமிழ்நாட்டின் இருண்ட காலம். சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு சாத்தான்குளத்தில் தந்தை - மகன் லாக்கப்பில் படுகொலை, தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலி, பாலியல் பலாத்காரத்திற்கு பொள்ளாச்சி, நிர்மலா தேவி விவகாரம் உள்ளிட்ட பட்டியலே சாட்சியாகும்.

எனவே, மீண்டும் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஆட்சி தொடர வாக்காளர்களுக்கு நியாயமான காரணங்கள் ஏராளமாக உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்த பெருமை மு.க. ஸ்டாலினுக்கு உண்டு. அவரது ஆட்சி என்பது மகளிருக்கான விடியலாக அமைந்திருக்கிறது. கூட்டணி கட்சியினரை அரவணைத்துக் கொண்டு, அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து நல்லிணக்கத்தோடு ஆட்சி செய்த மு.க. ஸ்டாலின் அவர்களது ஆட்சி ஒரு பொற்கால ஆட்சியாகவே மக்கள் கருதுகிறார்கள்.

இந்த அடிப்படையில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவில் தமிழ்நாட்டு மக்கள் தங்களது மேலான வாக்குகளை தி.மு.க. தலைமையிலான, காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கு அவரவர் சின்னங்களில் வாக்களித்து அமோக ஆதரவு வழங்கி மீண்டும் ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கத்திற்கேற்ப உங்கள் நல்லாதரவினை வழங்க வேண்டுமென இருகரம் கூப்பி அன்போடு வேண்டுகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM